# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43] ருத்ரோத்காரி ஆண்டு பங்குனித் திங்கள் 10—4—84 [இதழ்



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

ஆகம் கரணம் புவனங்கள்
ஆனதெல்லாம் [போகங்கள்
மோகம்பொருந்தவைத்தாட்டு தீ
மலாதியெல்லாம் [யேல்மும்
போக விடுத்தெனைக் கானந்தம்
பொறிஉனக்கே [காட்டப்
நாகம் அசைக்கும் மதுரா
நாயகனே. [புரிச்சொக்க

—சொக்கநாதக் கலித்துறை 6


ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்



குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 43 | 10–4–84 | இதழ் 5


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்க அழைப்பிதழ் | ... க |
| 2 | மே 11, 12, 13–இல் தருமைக்கு வாரீர்! | ... 233 |
| 3 | தருமைஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை | ... 237 |
| 4 | முருக நாயனாரும் உருத்திரபசுபதியாரும் | 243 |
| 5 | அபிராமி அந்தாதி | ... 249 |
| 6 | பண்டைய சீனவில் வேரூன்றி வளர்ந்த இந்து மதம் | ... 254 |
| 7 | கடிதம் | 255, 267 |
| 8 | உணர்வும் உறக்கமும் | 256 |
| 9 | திருவருட்பாத் திரட்டு | 262 |
| 10 | கேதாரம் நோக்கி! | ... 268 |
| 11 | எதிர் காலம் | ... 271 |
| 12 | செய்திகள் | ... 278 |

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனமும்
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகமும்
இணைந்து நடத்தும்

அனைத்துலக

# சைவசித்தாந்த முதல் கருத்தரங்கம்

## அழைப்பிதழ்

பேரன்புடையீர் !

உலகில் உள்ள சமயக் கோட்பாடுகள் பலவற்றுள்ளும் முதன்மையானதாக விளங்கும் சைவசித்தாந்தத் தத்துவச் சிறப்பினையும், பிறசமயதத்துவச்சிறப்பினையும் ஒப்புநோக்கி ஆய்வுசெய்து உலகெங்கும் பரவச்செய்யவேண்டும் என்ற பெருநோக்கில், தருமையாதீனம் இருபத்தாறுவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் "சைவ சித்தாந்த மேல்நிலை ஆய்வுமையம்" ஒன்றைத் தருமையாதீனத்தில் ரூபாய் இருபதுலட்சம் மூலதனத்தில் தொடங்கத் திருவுளம்பாலித்துள்ளார்கள்.

இவ்வாய்வுமையத் தொடக்கத்திற்கு முன்னோடியாகத் தருமையாதீனம், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தோடு இணைந்து 1984 மேமாதம் 11, 12, 13 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களும் "அனைத்துலக சைவ சித்தாந்த முதல் கருத்தரங்கம்" ஒன்றைத் தருமபுரத்தில் நிகழ்த்தவுள்ளது. பல நாடுகளிலிருந்தும் சைவ சித்தாந்தப் பேரறிஞர்கள் பலர் பங்கேற்கும் இம் மூன்றுநாள் கருத்தரங்கம் நிகழ்ச்சி நிரலில் காணும் வண்ணம் சிறப்பாக நடைபெறும். தத்துவத்துறையில் ஆர்வமுள்ள அன்பர்கள் பலரும் பங்கேற்றுச் சிறப்பிக்க வேணுமாய் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

வரவேற்புக் குழுவினர்.

உ

குருபாதம்

# அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கம்

**மே 11, 12, 13 — 1984**

**இடம் :- திருநெறிய தெய்வத்தமிழ் மன்றம், தருமபுரம்.**

## முதல் நாள் விழா

11—5—84 வெள்ளிக்கிழமை

காலை மணி 7-30 முதல் 8-30 வரை

திருமுறைப் பாராயணத்துடன், ஆறு யானைகள்மீது
வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், திருமுறை,
சித்தாந்த சாத்திரச் சுவடிகள் திருவீதி உலா

## கருத்தரங்கத் தொடக்கம்

திருமுறைப் பண்ணிசையரங்கு, காலை மணி 9-00 — 10-00

**சீகாழி திரு. சா. திருஞானசம்பந்தன்**
**திருச்சி திரு. சோ. முத்துக்கந்தசாமி** } குழுவினர்.

வரவேற்புரை : முற்பகல் மணி 10-00 — 10-15

ஆதீனச் சார்பில் :

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் "கயிலைமாமுனிவர்"
**காசிவாசி ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

பல்கலைக் கழகச் சார்பில் :

பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
**திரு. பி. எஸ். மணிசுந்தரம்**

ஆசியுரை : முற்பகல் மணி 10-15 — 10-35

தருமையாதீனம் குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

11—5—84 முற்பகல் மணி 10-35 — 10-55

தலைமைப் பேருரை :

கேரள மாநில ஆளுநர்

**மேதகு. பா. இராமச்சந்திரன்**

கருத்தரங்கத்தொடக்கப்பேருரை: முற்பகல்மணி 10-55—11-15

முன்னாள் இந்திய துணை ஜனாதிபதி

**மேதகு. பி. டி. ஜாட்டி**

கருத்தரங்க முதற்பேருரை : KEY NOTE ADDRESS

முற்பகல் மணி 11-15 — 11-35

**டாக்டர் திரு. வ. ஆ. தேவசேனாபதி**

இயக்குநர், தமிழ்ப்பல்கலைக்கழகத் தத்துவமையம், காஞ்சிபுரம்

சிறப்புரை : முற்பகல் மணி 11-35 — 1.-50

"சைவசித்தாந்தம் ஒரு பொதுநெறி"

**கவியோகி மகரிஷி, தவத்திரு. சுத்தானந்த பாரதியார்**

விழா மலர் வெளியீடு: முற்பகல் மணி 11-50 — 12-05

**தொழிலதிபர், டாக்டர் திரு. நா. மகாலிங்கம்**

பொள்ளாச்சி.

நூல் வெளியீடு : முற்பகல் மணி 12-05 — 12-15

"திருவருட்செய்தி"

( ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளுரைத் தொகுப்பு )

**திரு. எம். வி. ஜெயராமன்**

ஸ்தாபகர், ஸ்ரீ வேங்கடேசா கல்வி நிறுவனம், பெங்களூர்.

நூல் வெளியீடு : முற்பகல் மணி 12-15 — 12-25

"Siddhantha saivam in essence & manifestation"

MRS. Ratna Ma Navaratnam

**திரு. சை. வே. சிட்டிபாபு**

துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

நன்றியுரை : முற்பகல் மணி 12-25 — 12-30

**வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

11—5—84 பிற்பகல்

## கருத்தரங்கம்

### அமர்வு 1 (தமிழ்) பிற்பகல் 2–30 — 3–45

தலைமை உரை :

**மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
தமிழ்ப் பல்கலைக்கழகத் தத்துவமையம், காஞ்சிபுரம்.

கருத்தரங்க உரை :

'சைவ சித்தாந்தத்தில் உயிர் உண்மை'
**டாக்டர் திரு. இரா. தண்டாயுதம்**
இந்திய ஆய்வியல் துறை, மலேயா பல்கலைக்கழகம்.

'திருநாவுக்கரசர் தேவாரத்துள் தனி இயல்பு'
**டாக்டர் திரு சொ சிங்காரவேலன்**

'சைவ சித்தாந்தத்தில் விஞ்ஞான நோக்கு'
**திரு. சி. என். சிங்காரவேலு**
துணைத்தலைவர், சைவசித்தாந்தப் பெருமன்றம், சென்னை.

### அமர்வு 2 (ஆங்கிலம்) பிற்பகல் 3–45 — 5–00

தலைமை உரை :

**டாக்டர். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்**
இயக்குநர், டாக்டர். இராதாகிருஷ்ணன் தத்துவமையம்
சென்னைப்பல்கலைக்கழகம்.

கருத்தரங்க உரை :

'Concept of Karma in Saiva Siddhantha and Christianity'
**திருமதி. கே. ஐ. கொப்பேட்ரேயர்**
கனடா.

'The relevance of Saiva Siddhantha to the modern world'
**திருமதி. இரத்தினமா நவரத்தினம்**
முன்னாள் கல்வி இயக்குநர், ஸ்ரீலங்கா.

'Saiva Siddhantha in the western world'
**சைவத்தமிழ்மணி திரு. கே. ஞானசூரியன்**

11—5—84 வெள்ளிக்கிழமை மாலை
தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி
திருக்கோயில் மகாமண்டபத் திறப்புவிழா
மாலை 6 — 6-30 மணி வரை.

முன்னிலை :
" கயிலைமாமுனிவர் " காசிவாசி
ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

திறப்பாளர் :
மாண்புமிகு இராம. வீரப்பன்
அமைச்சர், செய்தி, அறநிலையத்துறை, தமிழ்நாடு அரசு.

கலைக் கண்காட்சித் திறப்பு விழா

திறப்பாளர் :
திரு. கு. ஆளுடைய பிள்ளை ஐ. ஏ. எஸ்.
ஆணையர், அறநிலையத்துறை, சென்னை.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி வழிபாடு.
பொதுப் பேரவை

இடம் :– திருநெறிய தெய்வத் தமிழ் மன்றம்
காலம் : மாலை மணி 6-40 — 8-00

வாழ்த்துரை :
ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள், திருப்பனந்தாள்.

மண்டபத் திறப்புரை :
மாண்புமிகு அமைச்சர் இராம. வீரப்பன்

கலைக்காட்சித் திறப்புரை :
திரு. கு. ஆளுடையபிள்ளை ஐ. ஏ. எஸ்.

அஞ்சலிச் சிறப்புரை :
திருமதி. சௌந்தரா கைலாசம்
டாக்டர். திரு ஔவை. நடராஜன்
திரு. பி. டி. ஆர். கமலத்தியாகராசன்

நூல்வெளியீடு :
' சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம் '
(சி. அருணைவடிவேல் முதலியார்)
திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
திருச்சி.

இன்னிசை

இரவு 8 — 9-30 மணி வரை
தருமை ஆதீன இசைப்புலவர்

# இரண்டாம் நாள் விழா

12—5—84 சனிக்கிழமை

**திருமுறைப் பண்ணிசை :** காலை மணி 8-45 — 9-20

**சேலம், டாக்டர் திருமதி S. ஜெயலக்ஷ்மி குழுவினர்**

**வரவேற்புரை :** காலை மணி 9-20 — 9-30

**டாக்டர் திரு. கே. செல்லப்பன்**

தலைவர், ஆங்கிலத்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி

**ஆசியுரை :** காலை மணி 9-30 — 9-45

குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம், குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

**தலைமையுரை :** காலை 9-45 — 10-00 பேரூர் ஆதீனம்

**தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

" Saiva Siddhantam an explication & Assessment By scholars the world over "

(தொகுப்பு: டி. என். இராமச்சந்திரன்)

**சிறப்புரையும் நூல்வெளியீடும் :** முற்பகல் மணி 10-00 — 10-20

**மாண்புமிகு செ. அரங்கநாயகம்**

கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு

## கருத்தரங்கம்

**அமர்வு 3 (ஆங்கிலம்) முற்பகல் மணி 10-20 — 11-30**

**தலைமையுரை :**

**திரு. மு. அருணாசலம்**

முதன்மைப் பதிப்பாசிரியர், பேரகராதிப் பிரிவு

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

" Sivayoga swami of Jaffna and saiva siddhantha "

**திருமதி. இரத்தின மா நவரத்தினம்**

முன்னாள் கல்வி இயக்குநர், ஸ்ரீலங்கா,

'சைவசித்தாந்தத்தில் ஒருமைவாதமும், பன்மைவாதமும்'

1. **தவத்திரு. சுவாமி வீரபாகு**

கௌவாய் ஆதீனம் (U. S. A.) பிரதிநிதி.

2. **டாக்டர் திரு. பி. பாண்டியன்** ,,

'திருமூலர் கருதும் சைவ சித்தாந்த முடிபுகள்'

திரு. டி. என். அருணாசலம்

12—5—84 முற்பகல்

**அமர்வு 4 (ஆங்கிலம்) முற்பகல் மணி 11-30 — 1-00**

தலைமை உரை : டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா

இயக்குநர், அஞ்சல் வழிக்கல்விப்பிரிவு,
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

கருத்தரங்க உரை :

" The Relevance of Saiva Siddhantha
to the modern world "

**டாக்டர். திரு. எஸ். ஓ. இராமகிருஷ்ணன்**

தலைவர், தத்துவத்துறை, தேசியக்கல்லூரி, திருச்சி.

" The Characteristics of Saiva Siddhantha "

**திரு. ந. ரா. முருகவேள்**

ஆசிரியர், திருக்கோயில், சென்னை.

" Is Saiva Siddhanta Acceptance of Three
eternal entities intelligible? "

**திரு. லியோன் ஹறன் செட்டே**

மக்மாஸ்டர் பல்கலைக்கழகம், கனடா.

" A Comparative study of Sankya System and
Saiva Siddhantha "

**டாக்டர். திரு. எஸ். என். கந்தசாமி**

மலேயா பல்கலைக்கழகம், மலேஷியா.

" Conception of Grace- An evaluation "

**டாக்டர். திரு. ஏ. எஸ். பிள்ளை**

தலைவர், தத்துவத்துறை, அண்ணாமலைப்பல்கலைக்கழகம்.

**அமர்வு 5 (தமிழ்) பிற்பகல் மணி 2-30 — 3-45**

தலைமை உரை : டாக்டர். திரு. கி. லக்ஷ்மணன்

முன்னாள் கல்வி இயக்குநர், ஸ்ரீலங்கா.

கருத்தரங்க உரை :

" திருஞானசம்பந்தர்தேவாரம்–பதியியல் கோட்பாடுகள் "

**திருமதி. கோமதி சூரியமூர்த்தி**

ஆய்வாளர், தமிழ்த்துறை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

" சைவமும் சீக்கியமும் – ஒப்பாய்வு "

**நெல்லை, டாக்டர். திரு. க. சுப்பிரமணியன்**

துணைப்பேராசிரியர், புனிதஜான் கல்லூரி, பாளையங்கோட்டை.

" சைவசித்தாந்த வளர்ச்சியில் திருமந்திரம் "

**டாக்டர் திரு. என். ஜெயராமன்**

இணைப்பேராசிரியர், காமராசர் பல்கலைக் கழகம். மதுரை.

12—5—84 பிற்பகல்

**அமர்வு 6 (ஆங்கிலம்) பிற்பகல் மணி 3-45 — 5-00**

தலைமை உரை : **திரு ஓ. வி. அளகேசன்**

முன்னாள் மத்திய அரசு அமைச்சர், செங்கல்பட்டு.

கருத்தரங்க உரை :

'Saiva Siddhantha and Visistadwaitha
a comparative analysis'

**டாக்டர். திரு. தெ. ஞானசுந்தரம்**

சுவடிப்புலம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை

'Saiva Siddhantam and Samarasa Sanmargam'

**டாக்டர். திரு கு சீனிவாசன்**

சிறப்பு நிலைப் பேராசிரியர், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை.

'Meikandar and His Methodology'

**டாக்டர் திரு. வை. இரத்தின சபாபதி**

இணைப்பேராசிரியர், தத்துவமையம், சென்னைப்பல்கலைக்கழகம்

## பொதுப் பேரவை

மாலை மணி 6-00 — 7-15

தலைவர் : **திரு. என். சேதுராமன்**

இயக்குநர், இராமன் & இராமன் நிறுவனம், குடந்தை.

உரை : 'சைவசித்தாந்தமும் கோயிற் கலைகளும்'

**டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன்**

முன்னாள் இயக்குநர், அருங்காட்சியகம், சென்னை

நூல் வெளியீடு :

1. 'திருமந்திரம் – 4, 5, 6 தந்திரங்கள் – உரையுடன்'

**திரு. டி. வி. வேங்கடராமன்.** ஐ. ஏ. எஸ்.,

ஆணையர், மற்றும் செயலாளர், உள்துறை, தமிழ்நாடு அரசு

2. 'சைவ சித்தாந்தம்' (ந. ரா. முருகவேள்)

**திரு. ஆர். சண்முகசிகாமணி.** ஐ. ஏ. எஸ்.

ஆணையர் & செயலர், வணிகவரி அறநிலையத்துறை, சென்னை.

நன்றியுரை : வித்துவான்

**ஸ்ரீமத். மௌன. மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

கட்டளை விசாரணை, மௌனமடம், திருச்சிராப்பள்ளி.

## திருத்தாஞ்சலி

இரவு மணி 7-30 — 9-45

**திருமதி. சித்ரா விஸ்வேஸ்வரன் குழுவினர், சென்னை,**

**தனி நடனமும், திருநீலகண்டர் நாட்டிய நாடகமும்.**

# மூன்றும் நாள் விழா

## 13—5—84 ஞாயிற்றுக்கிழமை

திருமுறைப் பண்ணிசையரங்கு: காலை மணி 9-00 — 9-30

திருமதி. சுவர்ணு சோமசுந்தரம்
திருமதி. ருக்மணி இராமசாமி } குழுவினர்

வரவேற்புரை : காலை மணி: 9-30 — 9-35

**வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீன சமயப்பிரசார நிலையம், சென்னை.

ஆசியுரை : காலை மணி: 9-35 — 9-50

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

சிறப்புரை : காலை மணி: 9-50 — 10-10

**மாண்புமிகு ஆர். சௌந்தரராசன்.**
சத்துணவுத் திட்ட அமைச்சர், தமிழ்நாடு அரசு.

## கருத்தரங்கம்

## அமர்வு 7 ( தமிழ் ) முற்பகல் 10-15 — 11-30

தலைமையுரை :

**திரு. டி. என். இராமச்சந்திரன்**
வழக்குரைஞர், தஞ்சாவூர்.

கருத்தரங்க உரை :

'காபாலிக சைவம்'
**பேராசிரியர் திரு. கு. அருணசலக் கவுண்டர்**
பங்களாப்புதூர்.

'சைவ சித்தாந்தமும், பண்டார சாத்திரங்களும்'
**திரு. கு சுந்தரமூர்த்தி**
முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

'சைவ சித்தாந்தத்தில் வாழ்வியல் நோக்கம்'
**திரு. ஆர். இராமசேஷன்**
பேராசிரியர், அரசுகல்வியியல் கல்லூரி, ஒரத்தநாடு.

'இந்து மதமும் சைவ சித்தாந்தமும்'
**டாக்டர் திரு. சு. வேங்கடராமன்**
தமிழ்த்துறை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

13—5—84 முற்பகல்

**அமர்வு 8 ( ஆங்கிலம்) முற்பகல் மணி 11–30 — 12–45**

**தலைமை உரை :** திரு. பெ. திருஞானசம்பந்தம்
தலைவர், சைவ சித்தாந்தப் பெருமன்றம் சென்னை

**கருத்தரங்க உரை :**

'Saiva Siddhanta and modern world'
திரு. ஜி. எம். முத்துசாமிப்பிள்ளை ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) சென்னை

'Tiripadarthas in Saiva Siddhanta — A Study'
திரு. ஹெர்மன்
போலந்து நாட்டு ஆய்வாளர்,
தத்துவ ஆய்வுத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.

'Relevance of Saiva Siddhanta to the modern world including the west'
டாக்டர் திரு. ஆர். கோலப்பபிள்ளை
தத்துவத்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

**அமர்வு 9 (தமிழ்) பிற்பகல் மணி 2–30 — 4–00**

**தலைமை உரை:** முதுமுனைவர். திரு. ச. தண்டபாணிதேசிகர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**கருத்தரங்க உரை :**

'சிறு தெய்வ வழிபாட்டில் சைவ சித்தாந்தப் படிமங்கள்'
டாக்டர். திரு. ச. கணபதிராமன்
காமராசர் கல்லூரி, தூத்துக்குடி

'சைவமும் சமணமும் – ஒப்பாய்வு'
டாக்டர். திரு. ம. சா. அறிவுடை நம்பி
முதுநிலை ஆய்வாளர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சை.

'நாட்டுப்புறப் பாடல்களில் சைவம்'
டாக்டர் செல்வி. சிவ. பார்வதி
முதல்வர், எம். வி. எம் அரசு மகளிர்கலைக்கல்லூரி, திண்டுக்கல்

'கடவுட்கொள்கையில் சைவமும், பௌத்தமும், சமணமும்'
திரு. அந்தோணி குருசு எம். ஏ.,
தூயவளவனர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

**நன்றியுரை :** வித்துவான்
ஸ்ரீமத் மௌன மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள்

13—5—84 பிற்பகல்

## அமர்வு 10 (ஆங்கிலம்) பிற்பகல் மணி 4-00 — 5-00

தலைமையுரை :

**திரு. என். ஆர். பட்**

இயக்குநர், பிரஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்
பாண்டிச்சேரி.

கருத்தரங்க உரை :

"Saiva Siddhantam and Modern physics"

**டாக்டர் திரு. சி. இ. சூரியமூர்த்தி**

பௌதிகத்துறை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

"Sivagnana Bodham"

**திரு. எஸ். கங்காதரன்**

துணைப்பேராசிரியர்,
சைவசித்தாந்தத்துறை, காமராசர் பல்கலைக் கழகம், மதுரை,

" The concept of Anava Mala as set forth in the Sivagamas"

**டாக்டர் திரு. சபா ரத்தினம்**

பேராசிரியர், வைணவக் கல்லூரி, சென்னை.

## கருத்தரங்க நிறைவுவிழா – பொதுப்பேரவை

மாலை மணி 6-30 — 8-30

நிறைவுரை :

**மாண்புமிகு. க. இராசாராம்**

சட்டப்பேரவைத் தலைவர், தமிழ்நாடு.

நூல்வெளியீடு : "சதமணிக்கோவை."
குறிப்புரையுடன் (மு. அருணசலம்.)

அறநெறியண்ணல்
**திரு. கி. பழனியப்பனார்** மதுரை,

" Grace in saiva Siddhantha " (Dr. Rama Ghose.)

**திரு. மீ. ப. சோமசுந்தரம்,** சென்னை.

கருத்தரங்கக் கண்ணோட்டம்

**மாண்புமிகு நீதிபதி. ஆர். செங்கோட்டுவேலன்**

உயர்நீதிமன்றம் சென்னை.

நன்றியுரை : **திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ
முதல்வர், த. ஆ. பல்கலைக்கல்லூரி, தருமபுரம்.

## கலைநிகழ்ச்சி

இரவு மணி 9-00

**மயிலாடுதுறை, கணநாதர் பொம்மை நாட்கசபை.**

உ

தருமையாதீனம்

அருள்மிகு ஞானம்பிகை உடனுகிய
அருள்மிகு ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்
பெருவிழா

# குருபூஜைவிழா

---

## திருநாள் விபரம்

| | | |
|---|---|---|
| 11—5—84 | வெள்ளி | கொடியேற்றம். |
| 15—5—84 | செவ்வாய் | சகோபுரதரிசனம், |
| 17—5—84 | வியாழன் | திருக்கல்யாணம். |
| 20—5—84 | ஞாயிறு | தீர்த்தம்; குருபூஜைவிழா. |
| 21—5—84 | திங்கள் | பட்டினப்பிரவேசம். |

ௐ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 43 | ருத்ரோத்காரி - பங்குனி - 10—4—84 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

# மே 11, 12, 13-இல் தருமைக்கு வாரீர்!

## குருவருட் சம்மதம் :

திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனமும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகமும் இணைந்து நடத்தும், அனைத்துலக முதல் சைவசித்தாந்தக் கருத்தரங்கம், மேமாதம் 11, 12, 13 வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய மூன்று நாட்களிலும் தருமையாதீனத்தில் மிகச் சிறப்பாக நடைபெற இருப்பதை மகிழ்ச்சியுடன் "ஞானசம்பந்தம்", தன் வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றது. பிப்ரவரிமாதம் முதல் வாரத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பெற்றிருந்த இக்கருத்தரங்கம் தவிர்க்க இயலாத காரணங்களால் ஒத்திவைக்கப்பெற்றது. தருமையாதீனக் குரு முதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவும், இவர்கள் கோயில்கொண்டுள்ள அருள்மிகு. ஞானாம்பிகை உடனாகிய ஞானபுரீசுவரர் திருக்கோயில் பத்துநாள்

பெருவிழாவும் தொடங்கும் மேமாதம் 11 ஆம் நாள் வெள்ளிக் கிழமை முதல் மூன்று நாட்களில் இக்கருத்தரங்கம் அமைவது குருவருட் சம்மதமாகவே அமைந்துள்ளது.

## தமிழர்களின் உரிமைச் சமயம் :

உலகெங்கிலும் வாழும் ஏறத்தாழ எட்டுக்கோடித் தமிழ் மக்களில் ஒரு சிலர் வேறுசில சமயங்களைத் தழுவியிருந்தாலும், பெரும்பான்மைத் தமிழ் மக்களின் உரிமைச் சமயமாக இன்றளவும் திகழ்வது சைவ சமயமே என்பது அனைவரும் அறிந்த ஒன்று. சைவ சமயம் வகுத்தளித்த உயர்நெறி சித்தாந்தசைவம். இது காலப்பழமையும், சாலப்பெருமையும் கொண்டிலங்குவது. வேதாகம காலத்தில் துளிர்ந்து. திருமூலர் காலத்தில் அரும்பி, தேவாரக் காலத்தில் மலர்ச்சியுற்று, மெய்கண்டார் காலத்தில் கனிந்து வடிவமைக்கப்பெற்ற அறிவார்ந்த சமயக் கோட்பாடாகத் திகழ்வது. சைவ சித்தாந்தத்தை விரித்தும், விளக்கியும் உரைக்கும் நூல்களும், நூலுரைகளும் பெரும்பாலும் தமிழிலும் சிறுபான்மை வடமொழியிலுமே உள்ளன. உலகளாவிய பெருமையும் சிறப்பும் சைவ சித்தாந்தத்திற்கு முன்னொருகாலத்தில் இருந்தபோதிலும் இப்பொழுது முழுவதுமாகக் கிடைத்திடவில்லை. காரணம் சைவசித்தாந்தச் செந்நெறியினை உலகமொழிகள் பலவற்றுள்ளும் உரியவாறு நாம் இதுகாறும் மொழிபெயர்த்து வழங்காமையேயாகும். ஆங்கிலத்தில்கூட இவ்வகையில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நூல்களே வெளியிடப்பெற்றுள்ளன.

## நிலைபேறுடைய நிறுவனம் :

தன்னலநோக்கோடு. வாழ்க்கைக்காகப் போராடும் தனி மனிதர்கள், நாடு, மொழி, மற்றும் சமய வளர்ச்சிக்குப் பெரிய தொண்டுகளை இயற்றுவர் என எதிர்பார்க்க இயலாது. சமயச் சார்பற்ற அரசும் இவ்வகையில் ஏதும் செய்திடத் துணியாது. எனவே, சமயம் வளர்க்கும் நோக்கில் எழுந்த நிறுவனங்களும், சமய உறைப்புடைய அறிஞர்களும் இணைந்து பணியாற்றினால் அன்றி உரியவாறு சமயத்தை வளர்த்தல் இயலாது என்பது தெளிவாகிறது. இதனை நன்கு திருவுள்ளத்தில்கொண்ட தருமை யாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்** அவர்கள் நிலைபேறுடைய நிறுவனம் ஒன்றை அமைத்து அதன் வாயிலாகச் சைவ சித்தாந்தத்தை உலகறியச் செய்யத் திட்டமிட்டார்கள்.

இவ்வெண்ண எழுச்சியின் அடிப்படையில் "சைவ சித்தாந்த மேல்நிலை ஆய்வு மையம்" ஒன்றைத் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்றதாகத் தருமையில் நிறுவ ஏற்பாடுகள் முறைப்படுத்தப்பெற்றுள்ளன.

## தருமையாதீன அருட்கொடை :

'சைவ சித்தாந்த மேல்நிலை ஆய்வு மையத்தின் குறிக்கோள், மற்றும் இது மேற்கொள்ளவிருக்கும் பணிகள்பற்றி முன்னைய இதழ்களில் விரிவாக அறிவித்துள்ளோம். முதல் தவணையாக ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் **ரூபாய் ஐந்து லட்சத்தைத்** தருமையாதீனத்தின் சார்பில் வழங்கியருளுகின்றார்கள். மேலும் ஐந்து லட்சத்தைப்படிப்படியாக வழங்கத் திருவுள்ளம் கொண்டுள்ளார்கள். ஆய்வு மையக் கட்டிடம், நூலகம், அலுவலகத்தேவைகள், ஆய்வாளர் ஊதியம், நூல்கள் வெளியீடு போன்றவற்றை மதிப்பீடு செய்தவகையில் ரூபாய் இருபது லட்சம் தேவை என அறியவந்துள்ளது. எஞ்சிய சுமார் பத்து லட்சம் ரூபாயை ஆய்வு மையம் சமய வளர்ச்சியில் நாட்டமுடைய நிறுவனங்களிலிருந்தும் அன்பர்களிடமிருந்தும் எதிர்பார்த்திருக்கிறது.

## வாரி வழங்க வாரீர் !

பெரும்பாலும் நிலவருவாயையே நம்பித் தமிழ்நாட்டுத் திருக்கோயில்களும் திருமடங்களும் செயற்பட்டுவருகின்றன. இயற்கையின் சீற்றத்தாலும், செயற்கையான அரசின் சட்ட திட்டங்களாலும், மக்களிடம் நாளுக்குநாள் குறைந்துவரும் நன்றியுணர்வினாலும், உரிய நில வருவாயின்றி இவை நிலை குலைந்துநிற்பதைப் பலமுறை "ஞானசம்பந்தம்" தன் வாசகர்களுக்கு விளக்கியுள்ளது. இத்தகு பொருள் முட்டுப்பாட்டுக்கு இடையேயும் தருமையாதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் நிலைநிதி நிறுவி இதனைத் தொடங்கத் திருவுளங்கொண்டது, சைவப்பெருமக்களால் நன்றியோடு நினைவு கூர்ந்து போற்றத் தக்கது. போற்றுவது மட்டும் போதாது. ஆய்வு மையம் அமையத் தேவைப்படும் எஞ்சிய தொகையை மகிழ்வோடு வழங்கும் கடப்பாடும் அவர்களுக்கு உரியது. இவ்வகையில் சித்தாந்தச் சைவத் திருமடங்கள், உபரிநிதி உடைய சைவத் திருக்கோயில்கள், உலகெங்கும் வாழும் வசதிபடைத்த சைவ அபிமானிகள், தொழில் அதிபர்கள், சைவ சித்தாந்த வளர்ச்சி

யில் ஈடுபட்டு உழைத்துவரும் சபைகள் மற்றும் அறநிறுவனங்கள் யாவும் தாராளமாக உதவவேண்டும் என ஞானசம்பந்தம் அன்புடன் வேண்டுகோள் விடுக்கிறது. கோடானுகோடி சைவத் தமிழ் அன்பர்கள் ஒருவர் ஒரு ரூபாய் வழங்க முன்வந்தால்கூடப் பெருநிதி குவியும். இதுவரை மையத்திற்கென்று நால்வர் ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கியிருக்கிறார்கள். பெயர் விபரம் இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

### கால்கோள் விழா :

திருவருளும் குருவருளும் துணைநிற்கத் தொடங்கப்பெறவிருக்கும் சைவசித்தாந்த மேல்நிலை ஆய்வுமையத்தின் கால்கோள் விழாவாகவே இக்கருத்தரங்கம் அமைகிறது. கருத்தரங்கம் பற்றிய விரிவான நிகழ்ச்சி நிரல் தனியே இவ்விதழில் வெளியிடப்பெற்றுள்ளது. முன்னர் அறிக்கைகள் வாயிலாக அறிவித்த அனைத்தும் சிறப்பாக ஏற்பாடாகிவருகின்றன. பலரும் கலந்து கொள்வதற்கு வாய்ப்பாக விடுமுறைத் திங்களாகிய மேமாதத்தில் கருத்தரங்கம் கூட்டப்படுகின்றது. நாடெங்கிலும் உள்ள சைவப் பேரன்பர்கள் முன்னதாகவே உறுப்பினர் கட்டணம் செலுத்திப் பதிவு செய்து கொண்டால் தான், உணவு, உறையுள் முதலிய வசதிகளை அவர்களுக்குச் செய்துதர வாய்ப்பாகும். உறுப்பினர் கட்டணம் மிகவும் குறைவாக ரூபாய் முப்பது மட்டுமே பெறப்படுகிறது. ஐந்நூறு பார்வையாளர்கள் மட்டுமே ஏற்கப்படவுள்ளனர். இதுவரை பதிவு செய்து கொள்ளாதவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டுகின்றோம்.

### பங்கேற்போம்! பணிபுரிவோம்!!

சைவ சித்தாந்த வளர்ச்சி வரலாற்றில் ஒரு பொன்னேடாக அமையவிருக்கும் இம்மாபெரும் முயற்சிக்குத் தமிழ் மக்களின் இனிய ஒத்துழைப்புக்கிடைக்கும் எனப் பெரிதும் எதிர்பார்க்கிறோம். நமது பாரம்பரியம் மிக்க தொன்மைச் சமய வளர்ச்சிக்குத் தருமையாதீனம் மேற்கொள்ளும் இம்மாபெரும் முயற்சியில் பங்கேற்போம்; பணியாற்றுவோம்; பல்லாற்றானும் உதவுவோம் என உறுதிபூண்போமாக.

சித்தாந்தத்தேனமுதருந்தத்

திருத்தருமை வாரீர்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

தேரழுந்தூரில் நடைபெற்ற

**கம்பர்கோட்டக் கால்கோள் விழாவில்**

வழங்கியருளிய

# ஆசியுரை

17—3—84

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க் கேசரண் ஆங்களே"

புலவரைப் போற்றுவீர்!

இன்று கம்பர் கோட்டக் கால்கோள் விழா. இன்றைய நாள் தமிழக வரலாற்றில் சிறப்பிடம் பெறத்தக்கநாள். ஒருநாட்டினைச் சிறந்த நாடாக மலரச் செய்வதும் மக்களை நெறிப்படுத்தி நல் வாழ்வு பெறச்செய்வதும் புலவர்களின் குறிக்கோளாக அமைந் திருந்தது. 'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே' என விதிக்கப்பட்டிருந்தாலும் வேந்தனுக்கும் முன்னோடியாக - அடி நிலையாக அமைவோர் புலவர்களே. கம்பர், வள்ளுவர் போன் றோர் அத்தகைய புலவர் வரிசையில் இடம்பெற்ற சால்புமிக்க பைந்தமிழ்ப் புலவராவர். இத்தகையோரால் பாடல்பெறுதநாடு நாடாக மதிக்கப்படுவதில்லை.

தமிழ் மன்னர்களும் வள்ளல்களும் புலவர்களை மதித்துப் போற்றினர். நாடாளும் மன்னர்கள் சான்றாண்மைமிக்க புலவர் களின் அறிவுரைகளைச் செவிமடுத்து அவற்றின் வழி ஒழுகினர். அவர்களால் புகழப்பெற்றனர். சங்ககாலத்துப் பாண்டிய மன்னர்களுள் ஒருவனாகிய தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாடிய,

"மாங்குடி மருதன் தலைவனாக
உலகமொடு நிலை இய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது ஒழிகஎன் நிலவரை"

என்று வஞ்சினக்காஞ்சித்துறை அமைந்த பாடல் இதற்குச் சான்றாகும். தம்பாடல்களால் பண்பாடுமிக்க நல்லநாட்டினையும் குறிக்கோளுடைய மக்களையும் உருவாக்க முயன்ற புலவர்களை அரசர்கள் போற்றினர். பண்டைத் தமிழ்ப் புலவர்களைப் போற்றும்வகையில் தெய்விகநிலையில் பழமையாகவே திருவள்ளுவர்கோயில் அவர் தோன்றிய மயிலையில் இருக்கின்றது. புதிதாக ஒரு வள்ளுவர்கோட்டமும் முன்னைய அரசால் சென்னை வளாகத்தில் கலைக்கண்ணோக்குடன் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 1953 இல் அன்றைய அரசால் அடிக்கல் இட்டும் இன்றுகாறும் நிறைவேறாது. மீண்டும் தற்போது கம்பர்கோட்டத்துக்குக் கால்கோள்செய்யப்பெற்றுள்ளது.

## நன்றிச்சின்னம் :

தகைமையுடன் வாழ்ந்தோரின் நெறிமுறைகளைக் காட்டி அவற்றின் வாயிலாக வாழ்வாங்கு வாழவேண்டிய நெறிமுறைகளை மக்கட்கு அறிவுறுத்திய சான்றாண்மைமிக்க புலவர் கம்பராவார். அவர் பெயரில் அவர் புகழோடு தோன்றிய மண்ணில் அவருக்குக் கலையழகுடன் கம்பர் கோட்டம் காண்பது தமிழக மக்களின் நன்றிச் சின்னமாவதுடன் தமிழக அரசின் கடமைச் சின்னமுமாகும்.

## முன் அறி தெய்வம் :

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்றார் ஔவைப்பிராட்டியார். தாய் தந்தையரே முதலில் நமக்குக் கண்ணுக்குத் தெரியும் கடவுளாவர். எனவே தாய் தந்தையரை முதலில் தெய்வமாகப் போற்றவேண்டும். அவர்கள் வாக்கு தெய்வவாக்கு. அதற்குமேல் நமக்கு நல்வழிகாட்டும் குருவையும் தெய்வமாகக் கருதல்வேண்டும். இம்மூவரையும் தெய்வங்களாகக்கருதி வழிபட்டால் அவர்கள் நம்மைத் தெய்வ நிலைக்கு ஈடேற்றுவர். இதனால் தான் 'மாதா பிதா குரு தெய்வம்' என்ற அனுபூதி வாக்கு எழுந்தது.

குழந்தைக்குத் தாய்தான் முதல் தெய்வம். அதனால்தான் "தாயிற் சிறந்ததோர் கோயிலும் இல்லை" என்றார் ஔவையார். கருவி கரணங்களால் ஆகியஉடலை (ஊனை) வளர்ப்பவள் தாய்,

உயிரை வளர்க்கும் ஞானத்தை வளர்ப்பவர் தந்தை. எனவே "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்றார் ஔவைப் பிராட்டியார். தாய் கோயிலாகவும் தந்தைசொல் கணிக்கத்தக்க மந்திரமாகவும் விளங்கும் பாங்கு அறிந்து ஒழுகுதல் நமது கடமையாகும்.

## கம்பர் காட்டிய நெறி :

கம்பர் காட்டிய இராமபிரான் தாய், தந்தை, குரு ஆகியோர் காட்டிய நெறியில் பிறழாது ஒழுகியவர். இராமபிரான் வாழ்ந்து காட்டிய நெறியை நமக்கு அறிவுறுத்தி நம்மையும் அங்ஙனம் வாழுமாறு வழி நடத்துகிறார். பிதுர்வாக்கிய பரிபாலனம் என்று கூறப்படும் - பெற்றோர் சொல்லைக் கடைப்பிடித்து வாழும் நெறியை இராமன் கடைப்பிடித்தார். தந்தையின் கட்டளை என அறிந்து கானகம்நோக்கிக் கடுந்தவம் மேற்கொள்ளச் செல்கிறார். கைகேயி இராமனை நோக்கி,

"ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவம்மேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டில் வாவென் றியம்பினன் அரசன்"

என்று அரசன் ஏவியதாகக் கூறினாள். ஆனால் இராமனோ "தாயே! அரசனது கட்டளை அன்றாயினும் நின்கட்டளையை, மறுப்பேனோ" என்று கூறுகிறான். "மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ?" என்பது அத்தொடர். இதன் வாயிலாகத் தாய் சொல்லை இகவாத இராமனை நமக்குக் காட்டி நம்மையெல்லாம் வழிப்படுத்துகிறார்.

அடுத்து இராமன் முடிசூட்டிக் கொள்ளும் பாங்கினைக் கம்பர் நம் கண்முன் நிறுத்துகிறார். வசிட்டர் இராமபிரானின் குரு. இராமன் முடிசூட்டிக் கொள்ளுபோது - தலையாய இச்செயலை வசிட்டர் செய்வதாக எடுத்துக் காட்டுகின்றார். "வசிட்டனே புனைந்தான் மௌலி" என்று குருவினை மதித்து நடந்த பெற்றியை எடுத்துரைக்கிறார்.

திருமுடியை எடுத்துக் கொடுத்தவர் யார்? எனக்கம்பர் கூறும்போது தம்மைப்புரந்த சடையப்பரை நினைவுகூர்ந்து நன்றியுணர்வைப் புலப்படுத்துகின்றார். "வெண்ணெய்ச் சடையன் மரபுளோர் கொடுக்க வாங்கி வசிட்டனே புனைந்தான் மௌலி" என்கிறார்.

இங்ஙனம் தாய்தந்தையரைப்போற்றுதல், குருவை மதித்துப் போற்றுதல், நன்றியுணர்தல் முதலியவற்றை இராமபிரான் வாயிலாகவே கம்பர் உலகுக்குக்காட்டி நல்ல நெறிகளைப் புலப் படுத்துகிறார். ஆதலாற்றான் கம்பருக்குக் கலைக்கோயில் இங்கே எழுப்பப்படுகின்றது. எழுப்பப்படுவது இன்றியமையாததது மாகும்.

## தெய்வப் புலவர் :

கம்பர் ஒரு தெய்வப்புலவர். அவர் வாக்குத் தெய்வத் தன்மையுடையது, மக்களை உயர்நெறிக்குக்கொண்டு செல்லும் தன்மையது ஆதலால்தான், கைகேயியிடம் இராமன்,

"மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ"

என்று கூறும் தொடரில் உண்மை நிலையைக் காண்கிறோம். இராமன்காடுசெல்வது கைகேயி தசரதனிடம்பெற்றவரத்தினால், மன்னவன் பணியன்று; எனத் தெளிவிக்கும் கம்பன் வாக்குத் தெய்வ வாக்கு. இங்ஙனம் அமைந்துள்ள கம்பராமாயணப் பகுதிகள் பல. மற்றோர் சான்றும் காட்டலாம்.

சொல்லின்செல்வனாகக் கம்பரால் காட்டப்பெற்ற அனுமன், தென்திசை சென்று இலங்கையில் சீதையைக் கண்டான். மீண்டு வந்து இராமனின் அடிபணிந்தான். சென்றுவந்த விவரங்கள் பற்றியோ – பிறசெய்திகளையோ கூறாமல் "கண்டனன் கற் பினுக்கு அணியை" என்று கூறுகிறான். இங்ஙனம் அமைத்த கம்பரின் திறமை தெய்வப் புலமையால் தோன்றியதே. என்ன நேர்ந்ததோ, அனுமன் கண்டானோ, இல்லையோ என்று கவன்று நிற்கும் இராமனுக்குக் 'கண்டனன்' என்பது உடனடியாக ஆறுதல் தந்துவிடும். அவள் கற்புப்பற்றி எண்ணும் இராமனை, "கற்பினுக்கு அணியை" என்னும் தொடர்தேற்றிவிடும். இவன் எப்படி இதனை அறிவான் என இராமன் ஐயுறக்கூடும். "கண்களால்" என்ற சொல் அவன் ஐயத்தைப் போக்கும். அனுமன் ஓர் பிரமசாரி; பிரமசாரிக்குத் தான் பிரமசரிய ஒழுக்கம் பற்றித் தெரியும். அவன் சீதையின் கண்களைக் கண்டான். அவள் கற்பைத் தெரிந்து கொண்டான். இப்படித் தெய்விக நலம் தோன்றப் பாடியுள்ள தெய்விகக் கவிஞருக்குக் கலைக்கோயில் எழுப்ப வேண்டியது இன்றியமையாத ஒன்றேயாம்.

சீதையின் கற்பு நெறியை விளக்கிய கம்பர் இராமபிரானது கற்பின் திண்மையையும் காட்டுகிறார். பெண்களுக்கு மட்டுமே

கற்பு உரியது; ஆண்களுக்கு உரியதன்று என்னும் நிலை தவறானது என்பதை ஏகபத்தினி விரதனான இராமன் வாயிலாக எடுத்துக்காட்டி நாட்டு மக்களை நெறிப்படுத்துகின்றார்.

இராமன் ஏகபத்தினி விரதன் என்பதைக் கம்பர் சீதை கூற்றாகவே எடுத்துக்காட்டுகிறார். சீதை அசோகவனத்தில் சிறையிருந்தபோது - தன்னைத் தேடிவந்த அனுமனிடம்,

> " வந்தெனைக்கரம் பற்றிய வைகல்வாய்
> இந்த இப்பிற விக்கிரு மாதரைச்
> சிந்தை யாலும் தொடேன் என்ற செவ்வரம்
> தந்த வார்த்தை திருச்செவி சாற்றுவாய் "

என வேண்டுகிறாள். இப்பகுதியில் இராமபிரானது கற்பினை " இருமாதரைச் சிந்தையாலும் தொடேன் " எனக் கூறியதாகச் சீதை வாயிலாகச் சிறப்பித்துக் காட்டுகிறார்.

கடவுள் வாழ்த்துப் பாடல் :

கம்பர் சைவரா, வைணவரா என்பது பற்றிச் சிந்திக்க வேண்டியதில்லை. வள்ளுவர் கடவுள் வாழ்த்து இயற்றியது போலவே ஒரு பொது தத்துவக் கொள்கையைக் காட்டுகிறார் கம்பர்.

உலகம் எல்லாவற்றையும் உளவாக்கல், நிலைநிறுத்தல் அழித்தல் என்னும் முத்தொழிலையும் எவன் செய்து அதில் தான் அகப்படாமல் இருக்கிறானோ, நீங்காமல் என்றும் எவன் முத்தொழிலையும் செய்கிறானோ, அவனே முதல்வன் என்கிறார் கம்பர். இத்தொழில் நீங்காமல் செய்யப்படுவதாகவும் நினைத்த மாத்திரத்தில் செய்யப்படுவதாகவும் எளிதாகச் செய்யப்படுவதாகவும் கூறுகிறார். இப்படி எந்நாளும் செய்தல் யாரால் இயலும்? அவரே தலைவர் என்கிறார்.

> " உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
> நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
> அலகி லாவிளை யாட்டுடை யார் அவர்
> தலைவர் அன்னவர்க் கேசரண் ஆங்களே "

என்பது கடவுள் வாழ்த்துப் பாடல்.

உலகங்களைப் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலைச் செய்யும் தலைவனுக்குச் சரண் ஆகுங்கள் என்கிறார். 'சரணுங்களே' என்பதைச் சரண் + நாங்களே எனப் பிரிக்கின்றனர். சரண் + ஆங்களே என்று பிரிப்பதே சரணமாகக்கொள்ளுங்கள் என்னும் பொருள் சிறப்பினைத் தரும். ஆகுங்கள் என்ப

குறுகி ஆங்கள் என்று வருகிறது. இப்பாடல் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானிடம் உயிர்களை ஆற்றுப்படுத்தும் உயர்ந்த சித்தாந்தக்கொள்கையை உடையது. கம்பர் தமது இராமாயணத்தில் வான்மீகி காட்டும் மனித இராமனை வேறுபடுத்திக் கோலம், சீலம், கொள்கை, சான்றாண்மை, அறபுத்திறன் முதலிய வற்றால் தெய்வநிலைக்குக்கொணடுவருகிறார் வள்ளுவர்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்றார். மனித நிலையில் வாழ்ந்த இராமனை வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்த தன்மைகளைக் காட்டித் தெய்வநிலைக்குக் கொண்டுவந்து சேர்த்த கம்பர் அத்தகைய உயர்நெறியை உலக மக்களுக்கு அறிவுறுத்துகிறார்.

வாழ்த்து :

இத்தகைய நெறிமுறை அருமைப் பாடுகளையெல்லாம் நினைவு கூர்ந்து அறிவுறுத்தி, நெறிப்படுத்திய கம்பருக்குக் கலைக்கோயில் கட்டும் அரசினையும் அரசினை இயக்கும் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல் என்று மக்களால் பாராட்டப் படும் முதல்வரையும் அவர்வழி நின்று காப்பிய அனுமனைப் போல உறுதியுடன் செயற்படும் அறநிலைய அமைச்சரையும் பாராட்டுகிறோம்.

இப்பணியில் பங்கேற்றுள்ள தலைமைச் செயலர், அற நிலையத்துறை ஆணையர், தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் சுற்றுலாத்துறைச் செயலர் மற்றும் பணியாளர்கள் ஆகிய அனைவரும் நலமெலாம் பெற்று நீடு வாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க அறநெறி! வளர்க கம்பன் புகழ்!

---

## சைவசித்தாந்த மேல்நிலை ஆய்வு மையத்திற்கு

### ரூ. 1000 வீதம் நன்கொடை வழங்கிய அன்பர்கள்

1. திரு. முக்கப்பிள்ளை, திருச்சிராப்பள்ளி — ரூ. 1000
2. திரு ஜி. வாகீசம்பிள்ளை, கனகசபைநகர் சிதம்பரம். — ரூ. 1000
3. திரு. சந்திரசேகரநாடார், திருச்சிராப்பள்ளி. — ரூ. 1000
4. டாக்டர். திரு K. அரங்கசாமிபிள்ளை, கனகசபைநகர், சிதம்பரம். — ரூ. 1000

# முருக நாயனாரும் உருத்திரபசுபதியாரும்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் 1—4—1984 ஆங்கிலமாத முதல் ஞாயிறு அன்று வழங்கிய அருளுபதேசத்தை ஒட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

வடக்கு வீதி வழியாகத் தருமையாதீனத் திருமடத்தை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறேன். அங்கே மணம் வீசியது!

அது வேதமணம்! திருமுறை மணம்!

வடமொழியையும் தென் தமிழையும் வளர்க்கும் இருகல்வி நிலையங்கள் அவ்வீதியில் தேவாரப்பாடசாலே, வேதாகம பாடசாலையாகப் பரிணமிக்கின்றன.

மனமகிழ்ச்சியோடு வீதியைக் கடக்கும்போது நேரமானதே தெரியவில்லே. திருமடத்தினுள்ளே வேகமாக நுழைகிறேன்; மணி 11.

அன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை வணங்கித் திருநீறு பெற்று அமர்கிறார்கள்.

தேவார இன்னிசை! நாமாவளி... அடுத்து, ஸ்ரீருத்ர பாராயணம்!

ஸ்ரீருத்ர பாராயணம் நிகழ்ந்ததே; ஏன் இந்தப்பாராயணம்?

"முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்" –என்று சுந்தரர் அருளிய முறையில் குருமணிகள் உபதேசம் அருள இருக்கின்றார்கள்! உருத்திரபசுபதியார் முறைப்படி 'ஸ்ரீருத்ரம்' ஜெபித்தனர் அல்லவா! – ஐயம் நீங்குகிறோம்!

குருநாதர் உபதேசம் தொடங்குகின்றார்கள்! உலகியலோடு ஒட்டித்தான்! அவர்கள் உலகநிலேக்கு அப்பாற் பட்டவர்கள் என்றாலும் உலகமக்கள் நலம்பெற வேண்டும் என்பதிலே அவர்களுக்கு அக்கறை அதிகம்.

"ஏப்ரல் – 1 – இன்று! இதனை முட்டாள்தினம் என்பார்கள்"– அடுத்த மாதம் (மே மாதம்) முதல் தேதியைத் தொழிலாளர் தினம" என்பர்.

குருநாதர், சாதாரணமாக – நம்மைப்போல் சிந்திப்பதில்லை; அவர்கள் நோக்கிலே ஓர் உயர்வு உண்டு! சிறப்பு உண்டு.

முட்டாள் அறிவு விளக்கம் பெறாத நிலையில் இருப்பவன். அறிவு விளக்கம் பெற்றும் தெளிவு பெறாத நிலையில் இருப்பவர் தொழிலாளர்; அறிவு விளக்கமும் தெளிவும் பெற்ற நிலையுடையோர் அறிவாளிகள் எனப்படுவர் – இப்படி ஓர் சிறப்பான விளக்கத்தினை அருளினார்கள்.

அறிஞர்கள், தொழிலாளர்கள் பற்றிய சிந்தனை வழங்கும் போதே அறிவுக்கருவிகள் தொழிற்கருவிகள் பற்றிய சித்தாந்தக் கோட்பாடுகளையும் அருளினார்கள்.

“ சைவ சித்தாந்தம் 36 தத்துவங்களைக்கூறுகின்றன; அவற்றுள் கருவிகள் பற்றிப்பேசப்படுகின்றன; கருவிகள் இல்லாவிட்டால் எதனையும் உணரமுடியாது. மெய் (உடம்பு), வாய், கண், மூக்கு, காது என்னும் கருவிகளைக் கொண்டே நாம் உணர்கிறோம். அறிகருவிகள் ஐந்து கற்றல், கேட்டல் சிந்தித்தல் முதலியன கருவிகளால் உண்டாகும் செயல்கள் ’

இவ்வாறு அறிகருவிகள் தன்மையை விளக்கித் தேவி பாகவதம் முதலிய நூல்களிலிருந்து மேற்கோள் காட்டினார்கள்! அகக்கருவிகள் பற்றியும் குறிப்பிட்டார்கள்! மனம் புத்தி, சித்தம், அகங்காரம் என்பன அவை

“ அறிவுக்கருவிகள் மனித உடலின் மேற்புறத்திலும் தொழிற்கருவிகள் உடலின் கீழ்ப்புறத்திலும் அமைந்திருப்பதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும் ”

இப்படி அருளிய குருமணிகள், “ மூளை இயக்க இயங்குவது’ இந்த இயக்கம் மாறுபடாத வகையில் இறைவன் இயக்கி வருகிறான் ” என்று அருளிச்செய்தார்கள்! கடவுளின் பேராற்றலை எண்ணி வியந்து போற்றுகிறோம்!

தொழிலையும் அறிவையும் பற்றிப் புதிய கோணங்களில் விளக்கிய குருநாதர், “ அறிவு எங்கே இருக்கிறது என்று கூற முடியாது; அது கண்ணால் காணக்கூடிய பொருளும் அன்று. உழைப்பிற்கேற்ப அறிவு வளம் பெறும்; விஞ்ஞானிகள் எல்லோரும் பட்டம் பெற்று புதியகண்டு பிடிப்புகளை அறிமுகப் படுத்தினர்? எந்தப்புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோ? – முன் ஜன்மத்தில் செய்த பாவபுண்ணியங்களுக்கு ஏற்ப அறிவு செயற்படும் ” என்று விவரித்தார்கள்.

இப்படித் தத்துவ நெறிகளை அருளியவாறே முதலில் முருக நாயனார் புராணத்தை ஒட்டிய கருத்துக்களை மனம்கொள அறிவுறுத்துகின்றார்கள்.

முருகநாயனர் செய்த பணி என்ன? அதனை எவ்வாறு செய்தார் என்பதை விளக்கினர்கள்.

" ஆசாரமான இடத்தில் - ஆசாரமாகப் பூக்கொய்து - பல வகை மாலைகளைக் கட்டி இறைவனுக்குச் சாத்தும் தொண்டு அவருடையது - நிலையான பணியாக இதனைச்செய்தார் "

குருமணிகள், ஆசாரமாகச் செய்வதும் முன்னை வினையால் ஆவது, என்று ஒரு குறிப்பை உணர்த்திப் பக்குவத்தால் இபபயிற்சி உண்டாகும் என அருளினர்கள்.

ஆசாரமாகப் பறிப்பது என்றால் எப்படி - எல்லாருக்கும் இந்தச் சந்தேகம் தோன்றத்தானே செய்யும்! குருமணிகள் தொடர்ந்து விளக்கம் தருகின்றார்கள்.

சூரிய உதயத்திற்கு முன்பே எழ வேண்டும். கடன்களை முடித்து நீராடவேண்டும்; விபூதி பூசிக்கொள்ள வேண்டும் வாயைக்கட்டிக் கொள்ளவேண்டும் - அப்போதுதான் எடுக்கும் மலரின் மீது எச்சில் தெரிக்காது -

மேலும் அருளுகிறார்கள்.

பக்தியோடுமலர் பறிக்க வேண்டும்; பக்தி இன்றி எடுக்கும் பூ பூசனைக்கு ஏற்றதல்ல

பூக்களை மலரும் முன் எடுப்பதா? மலர்ந்த நிலையில் எடுப்பதா? மலர்கின்ற நிலையில் எடுப்பதா? - இப்படி நாம் சிந்திக்கும் போது...

அரும்புகளை எடுக்கக் கூடாது; மலரும் நிலையிலுள்ள பூக்களை எடுத்துத் தொடுக்கவேண்டும்.

கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நான்கு வகைப்பூக்கள் உண்டு; அவைகளைப்பறிக்கும்போது பூக்குடலையை மார்புக்குக் கீழே வைத்துக் கொள்ளக்கூடாது - அது அனுசாரம்; ஆசாரம் அற்றது.

இவ்வாறு மலர்களைப் பற்றிய பல்வேறு கருத்துக்களை உணர்த்திக் குருமணிகள் மலர்பறித்தல் பற்றிய சிந்தனை எறிபத்த நாயனர் புராணத்திலும் அமைந்திருப்பதை நினைவு கூர்ந்தார்கள்.

" கண்ணி, தார், கொண்டை, இண்டை, தொங்கல், சரம் என ஆறு வகை மாலைகளை முருகநாயனர் கட்டினர்; ஒவ்வொரு காலத்திற்கும் ஒவ்வொரு வகை மாலை கட்டினர். வர்த்தமானே

சுவரப்பெருமானுக்கு அன்போடு சாத்தினர்." இவ்வரலாற்றைக் குருமணிகள் ஆய்வு நோக்கோடு வெளிப்படுத்தினர்கள்.

நான்கு வேதம் போன்றவை நால்வகைப்பூக்கள் – வேதங்களின் பொருள்களை 6 அங்கங்கள் (சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம், கற்பம்) விளக்கும். ஆறு வேதாங்கங்களைப்போல அறுவகைமாலைகளை ஆறுகாலங்களில் சாத்தினர் என அருளியபோது சமயதத்துவங்கள் வழிபாட்டு முறைகளோடு எத்துணைப்பொருத்தமாக இருக்கின்றன என வியக்கிறோம்!

முருகநாயனர் "பொழுது அறுகாலத்து என்றும் பூசனை விடாது" செய்தவர். அவர் பூசனை புரிந்த இடமும் அவதரித்த தலமும் திருப்புகலூர். நன்னிலத்திற்கு அருகே இருப்பது இத்தலம். அப்பர் சிவன்தாள் சேர்ந்த தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவரும் இத்தலத்தைப் பாடியுள்ளனர். இறைவன் சுந்தரர் பொருட்டுச் செங்கல்லைப் பொன்னக்கிய அற்புதம் நிகழ்ந்தமையும் இங்கேதான் – இவ்வாறு திருப்புகலூர்ப் பெருமைகள் பலவற்றைத் தொகுத்து வழங்கினர்கள்.

இவ்வூர்க்கோயில் நீரால் சூழப்பட்டது; அகழி சூழ்ந்தது – என அருளி, இதுபோன்ற அமைப்புடையவை இரும்பூளை, திருநின்றியூர், குரங்கணில் முற்றம் என விளக்கினர்கள்.

மேலும் முருகநாயனர் வழிபட்ட வர்த்தமானேசர் கோயில் புகலூரில் அக்னீசர் சந்நிதியின் வடபக்கம் இருப்பது என்னும் குறிப்பையும் அருளினர்கள். முருகநாயனர் உருவம் அங்கு மாடத்தில் அமைக்கப் பட்டிருத்தலைக் குறிப்பிட்டார்கள்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நீலநக்கர் ஆகியோரைத் தம் இல்லத்தில் அழைத்து மாகேசுவர பூசை நிகழ்த்தும் பேறு பெற்றவர் இவர். திருஞானசம்பந்தர் திருமணத்தின்போது சிவசோதியிற் கலந்தார்.

இவ்வாறு முருகநாயனர் புராணத்தைத் தெளிவித்த குருமணிகள் உருத்திரபசுபதிநாயனர்புராணத்தைத் தொடர்ந்து அருளினர்கள்

உருத்திரம், ருத்ரம்; பசுபதி என்பது இயற்பெயர். உருத்திர பசுபதியார் என வழங்கப்பட்ட அவர் கொல்லுமாங்குடிக்கு அருகில் உள்ள திருத்தலையூரில் அந்தணர்மரபில் அவதரித்தவர்.

இங்ஙனம் அருளிய குருநாதர் 'பசுபதி' என்னும் பெயரையும் விளக்கினர்கள். பசு – கட்டப்பட்டது; சுதந்திரம் அற்றது. ஆன்மா. பதி – தலைவன் – உயிர்கட்குத் தலைவன் பசுபதி – என்று அருளி, உலகில் மனிதர்கள் இறைவன் பெயர்களைக் கொண்டிருப்பது இறைவனை நினைவு கூர்தற்கே எனத் தெளிவித்தார்கள்.

அடுத்து ஸ்ரீருத்ரத்தின் பெருமையை விளக்கினர்கள்.

இருக்கு, எசூர், சாமம், அதர்வணம் எனவேதம் நான்கு; அதர்வணத்தை நீக்கி மற்ற மூன்று வேதங்களை "வேதத்திரயி" என்பர். இவற்றுள் ரிக்வேதம் – மந்திரங்கள்; எஜுர் – செய்முறைகள்; சாமம் – கானமாக அமைகிறது.

அதர்வணம் நீங்கமற்றமூன்று வேதங்களில் எஜுர் நடுவில் வுள்ளது. எஜுர் ஏழு காண்டமுடையது. அதில் நான்காவது காண்டம் நடுவில் இருப்பது. நான்காவது காண்டம் பதினொரு அனுவாகங்களையுடையது. பதினொராவது அனுவாகத்தின் நடுவில் இருப்பது ஆருவது சூக்தம்; ஆருவது சூக்தத்தில் "நமசிவாயச சிவதராயச" என்றுஐந்தெழுத்துப்பேசப்படுகிறது.

இவ்வாறு அருளிய குருநாதர் வேதசாரமாகிய தேவாரத்திலும் இவ்வகையில் ஐந்தெழுத்து அமைந்திருத்தலை ஒப்பிட்டு உணர்த்தினர்கள்.

மூவர் அருளிய தேவாரத்தில் அப்பர் தேவாரம் நடுவில் அமைந்தது. 4, 5, 6 திருமுறைகள் அப்பர் தேவாரம். 5 ஆம் திருமுறை அவற்றுள் நடுவணது. அது 100 பதிகம் கொண்டது. அதில் 51 ஆவது பதிகம் திருப்பாலைத்துறைப் பதிகம். திருப்பாலைத்துறைப் பதிகத்தில்,

" விண்ணினர்பணிந் தேத்த வியப்புறும்
மண்ணி னர்மற வாது சிவாய என்று
எண்ணி னர்க்கு இடமா எழில் வானகம்
பண்ணி னரவர் பாலைத் துறையரே "

என்னும்இப்பாடல் 6 ஆம் பாடல் இதன் இடையில் "சிவாய என்று' என ஐந்தெழுத்து ஓதப்பட்டுள்ளமையைத் தெளிவாக எடுத்து விளக்கினர்கள்.

உருத்திரபசுபதி நாயனர் குளத்தில் கழுத்தளவு நீரில்நின்று கைகளைத் தலைமீது குவித்து இரவும் பகலும் இறைவன் சிந்தனையுடன் ஸ்ரீருத்ரம் ஓதினர்.

இப்பகுதியை இனிய விளக்கம் தந்து அருளினர்கள்!

" தண்ணீர் மனிதனை விடக்கனமானது. கழுத்தளவு நீரில் நின்றபடி பசுபதியார் ஸ்ரீருத்ரஜபம் செய்தது அவரது சித்தி நிலையைக்காட்டுகிறது. நீரில் நின்று இதனைச் செய்தல் சித்தி பெறுதவர்களால் முடியாது "

இங்ஙனம் அட்டமாசித்திகள் பெறச் சாதனை தேவை. இத்தகைய சாதனையை இடையறாத தொண்டால் பெற்றவர் இவர்.

இவ்வாறு நாயனுர் பெருமைகள் பலவற்றை உணர்த்திய குருநாதர், ஸ்ரீருத்ரத்தை இருதயத்தில் வைத்துத் திருமால் பூசித்தார் என விஷ்ணு புராணம் கூறுகிறது என்றும் விநாயகரையும் சுப்பிரமணியரையும் ருத்ரராகக் கூறுவது உண்டெனவும் மகாருத்ரர் பற்றிய குறிப்புக்களையும் ஏகாதச ருத்ரர் பற்றியும் அருளினுர்கள்.

புராண விரிவுரையின் இடையிடையே தேவார திருவாசக மேற்கோள்களையும் கதைகளையும் இயைபுபடுத்திக் கூறிக் கருத்துக்களைத் தெளிவு படுத்தினுர்கள்.

திருத்தலையூர் திருச்சிமாவட்டம் முசிறியை அடுத்துள்ளது என்பர் சிலர். அங்கே அந்தணர் இருப்பு இல்லை. ஹோமகுளம் என்று இருப்பது வேள்வி குண்டத்தைக் குறிப்பது. இராவணனது வரலாற்ருேடு தொடர்புடையது என்ற குறிப்பை வழங்கினுர்கள்.

இவ்வாறு இருநாயன்மார் வரலாற்றையும் தக்கசான்றுகளுடன் பக்திச் செறிவோடு அருளி நம்மைப பரவசப் படுத்தினுர்கள்; நற்தவனத்தின் சிறப்பு; ஆண்டவனிடம் அச்சம் கொண்டு வாழும் நெறி, திருமால் சைவ சமயத்தோடு இணைந்த நிலையில் இராமானுஜர் காலத்துக்கு முன்வரை கருதப்பட்டமை- முதலிய பல கருத்துக்கள் அன்றைய உபதேசத்தில் இடம் பெற்றன.

கருத்துக்கள் பலவற்றை அறிந்த மனநிறைவோடு இல்லம் திரும்பினேம். வாழ்க குருமணிகள்!

## அட்டைப்பட விளக்கம்

தருமையாதீனமும், திருச்சிராப்பள்ளி பாரதிதாசன்பல்கலைக் கழகமும் இணைந்து, தருமபுரத்தில் 11, 12, 13—5—1984 ஆகிய மூன்று நாட்கள் நடத்தும் அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கை முன்னிட்டு, சைவ சித்தாந்தத்திற்கு அரண்செய்த ஸ்ரீ மெய்கண்டார் திருவுருவம் " ஞானசம்பந்தம் " இதழை அணிசெய்கிறது.

# அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M. A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.
பருத்தியூர்.

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம் அடியாரை
[ மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதன்றே, புதுநஞ்சை யுண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே,
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுன்னை
[ வாழ்த்துவனே. 46

### அ. வெறுக்கும் தகைமைகள் செய்யினும் தம் அடியாரை மிக்கோர் பொறுக்கும் தகைமை புதியதன்றே.

(1) பிழைச் செயல்களைச் செய்தாலும் தமது அடியார்களைப் பொறுத்து அருட்செய்வது என்பது புதிய செயல் அன்று. தொன்றுதொட்டு இருந்துவரும் பழக்கமேயாகும்.

(2) அறியாமை, சூழ்நிலைகள், முன்பிறவித் தொடர்பு முதலிய காரணங்களால் அடியார்களும் சிலதவறுகள் செய்யும்படி நேர்ந்து விடலாம். அவ்வாறு நிகழும் தவறுகளை உலக வழக்கத்தின்படி பார்க்கும் பொழுது அவை வெறுக்கத்தக்கன வாகத் தோன்றிடினும், சான்றாண்மை மிக்கோர் அவற்றினைப் பெரிது படுத்தாமல் தம் அடியாரைப் பொறுத்து அருளுவர். இவ்வழக்கம் புதியதன்று. உயர்பண்புகளும், சான்றாண்மையும்மிக்க பெரியோர்களையும், தெய்வங்களையும் இங்கு மிக்கோர் என்கிறார்.

(3) தவறு செய்தல் மனிதவியல்பு, மன்னித்தல் மகேசன் இயல்பு என்ற பொருளில் அடிக்கடி எடுத்தாளப்படும். "To err is human and to forgive is Divine" என்ற ஆங்கிலப் பழமொழி இங்கு நினைவுக்கு வரும்.

(4) தட்சன்மகளிர் இருபத்தெழுவரையும் ஒத்த அன்புடன் நடத்தத் தவறி, அவனது சாபத்திற்கு இலக்கானான் சந்திரன். முன்னரே குருபத்தினியை அபகரித்த பிழையும் புரிந்த சந்திரனுக்கு அயன்முதல் எத்தேவரும் அபயமளிக்க விரும்பினாரில்லை. அவனது வெறுக்கும் தகைமைகள் கண்டு விலக்கினர். ஆனால் மிக்கோனாகிய சிவபெருமான், குற்றத்தினையுணர்ந்து, மூன்றாம் பிறையாய்க் குறைந்து வந்து அடைக்கலமென்ற சந்திரனை மன்னித்து அருட்செய்தான். இதுமிக்கோர் பொறுக்கும் தகைமை.

(5) இறைவனை விடுத்து தட்சன் இயற்றிய வேள்வியில் பங்குபெற்ற தேவர்கள் ததீசியின் சாபத்திற்கும், சூராதி அவுணர்களின் இன்னலுக்கும் ஆளாயினர். அவ்வாறு இறைவனை விலக்கிய வேள்விக்குத் தேவர்கள் சென்றது வெறுக்கும் தகைமை. பின் அவர்கள் அவுணர்களின் தொல்லை தாளாது இறைவனிடம் இறைஞ்சினர். புதல்வனைத் தந்து துயரினைத் துடைத்தான் இறைவன். அது பொறுக்கும் தகைமை.

(6) இராமனும் சீதையும் தனிமையில் அமர்ந்திருந்தனர். அவ்வமயம் ஆகாயத்தில் காகத்தின் வடிவத்துடன் இந்திரன் மகன் சயந்தன் பறந்து கொண்டிருந்தான். திடீரெனக் கீழே வந்து சீதையின் மார்பகத்தைத் தன் அலகினால் குத்திவிட்டுச் சென்றான். அதனைக்கண்டு சினந்த இராமன் அருகில் இருந்த ஒரு புல்லினை எடுத்து அதனையே 'பிரம்மாஸ்திர'மாக ஏவினான் ("வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்" என்ற பழமொழி இவ்வரலாற்றினை ஒட்டி எழுந்ததே.) அது சயந்தினைத் துரத்திச் செல்ல எங்கும் அடைக்கலம் கிடைக்காது இராமன் இருந்த இடத்துக்கே மீண்டும் வந்தான். அவனது பரிதாப நிலை கண்டு மனம் இளகிய சீதாபிராட்டி சயந்தனை மன்னிக்கும்படி இராமனிடம் வேண்டினாள். அவ்வாறே அவனும் மன்னித்து ஒரு கண்ணினை மட்டும் வாங்கி சயந்தனை விடுத்தான். இது இராமயணத்தில் இடம்பெற்ற வரலாறு. இங்கு சயந்தன் செயல் வெறுக்கும் தகைமை. சீதையின் கருணை மிக்கோர் பொறுக்கும் தகைமை.

மேலும் இராமாயண அகலிகைப் படலத்தில் "பிழைத்தது பொறுத்தல் என்றும் பெரியவர் கடனே என்பார்" என கம்பன், மிக்கோர் பொறுக்கும் தகைமையினைக் குறிப்பிடுகிறான்.

(7) அபிராமி அந்தாதியில் இப்பாடல் அடைக்கலத்தின் சிறப்பினைக் கூறும் பாடலாகும். சிவபிரான் அளித்த அடைக்கலத்தினை பாடலின் அடுத்த பகுதியில் குறிப்பிடுகின்றார்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்துள் அடைக்கலப்பத்தில் இடம் பெறும் இதே கருத்தமைந்த பாடல் வருமாறு :-

" வெறுப் பனவே செய்யும் என்
சிறுமையை நின்பெருமையினல்
பொறுப் பவனே ! அராப் பூண்பவனே !
பொங்கு கங்கைச் சடைச்
செறுப்பவனே ! நின் திருவருளால்
என் பிறவியை வேர்
அறுப்பவனே ! உடையாய் ! அடியேன்
உன் அடைக்கலமே.

தாருகாவனத்து முனிவர்களின் தீமகத்தினின்று ( ஆபிசார யாகத்தினின்று ) ' இறைவனை அழிப்போம் ' என்று புறப்பட்டு வந்த அரவினை அணிந்தான் இறைவன், ' அகில முழுவதும் அழிப்பேன் ' என்னும் ஆணவத்துடன் பொங்கிவந்த கங்கையினைச் சடையில் செறுத்தான் இறைவன். வெறுக்கும் தகைமைகளை, மிக்கவனுன இறைவன் 'பொறுக்கும் தகைமை" இப்பாடலில் கருத்துடை அடைகளாக அமைந்திருக்கின்றன அந்தாதியின் அடுத்த அடியும் அங்ஙனமே அமைந்திருப்பதைக் காணலாம்.

(8) சிங்கை நமச்சிவாயர் தமது உலகம்மை கலித்துறை அந்தாதியில்,

" வல்லது செய்யினும் நீ உன்மனம் பொறுத்து
நல்லது செய்வது உனக்கே புகழ், தொண்டன் நான் "

என்று அடியவனுகிய தன்னைப் பொறுக்க வேண்டுகிருர்.

(9) ஏது பிழை நான் செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கி தீது புரியாத தெய்வம் " என்று முருகனின் பொறுக்கும் தகைமையினைப் புகழுகிருர். திருப்போரூர் சந்நிதிமுறையில் சிதம்பர சுவாமிகள்.

## ஆ. புதுநஞ்சையுண்டு கறுக்கும் திருமிடற்றுன் இடப்பாகம் கலந்த பொன்னே !

(1) பாற்கடல் கடைந்த பொழுது தோன்றிய ஆலலமாகிய புதிய நஞ்சினையுண்டு அதனல் கறுத்த கழுத்தினையுடையவனின் இடப்பாகத்தில் பொருந்திவாழும் பொன் அனையீர் ! என்று அழைக்கிருர்.

(2) தோன்றிய சிறிது நேரத்துக்குள் இறைவன் அதனை யுண்டான். அப்போது தான் தோன்றியிருந்த நஞ்சு ஆகலின் ' புது நஞ்சு ' என்ருர். மற்றும் நாணுகப் பயன்படுத்திய வாசுகி

என்னும் பாம்பு கக்கிய ஆலமும் (விஷமும்) கடலின் அடியினின்று தோன்றிய ஆலமும் கலந்து 'ஆலாலம்' என்ற கூட்டு நஞ்சாக உருவானதாலும் 'புதுநஞ்சு' என்றார்.

(3) 'ஸ்ரீ' என்ற சொல்லுக்கு 'நஞ்சு' என்ற பொருளும் உண்டு. பாஸ்கரராயர் போன்றோர் அதனை விளக்கியிருக்கின்றனர். 'ஸ்ரீ' என்னும் நஞ்சினை கண்டத்தில் (கழுத்தில்) உடைமையால் அவனை 'கண்டன்' என்று வடமொழியில் அழைப்பர். 'திருமிடற்றன்' என்பது அச்சொல்லின் அழகான தமிழாக்கம் ஆகும்.

அனைத்துலகினையும் காத்த வரலாறு அக்கழுத்தோடு (மிடற்றோடு), இணைந்திருப்பதாலும் அதனைச் சிறப்பிக்க 'திருமிடற்றன்' என்றார் எனினும் ஆம்.

(4) புது நஞ்சையுண்ட வரலாற்றில் சிவபெருமானின் பொறுக்கும் தகைமையும் அடைக்கலம் புகுந்தோரைக் காத்த சிறப்பும் தெளிவாக விளங்குகிறது. பாற்கடலினைக் கடைய முற்பட்டபொழுது தேவர்கள் 'சிவபெருமானைக் கலந்தாலோசிக்கவும் இல்லை. வேண்டவும் இல்லை. அது வெறுக்கும் தகைமை. அவர்கள் ஆலகாலத்தின் கொடுமைக் காற்றாது 'அபயம்' என்றவுடன் ஈசன் தனது பொறுக்கும் தகைமையினால் அவர்களைக் காத்தான்'

(5) இச்சரணாகதி அல்லது அடைக்கலம் முதன்மையானது. மிகவும் பிரபலமான 'விபீஷண சரணாகதி' என்னும் இராமாயணத்தின் பகுதி சிறப்புமிக்க ஒன்றாகக் கொண்டாடப்படுகிறது. தன்னை இராமன் ஏற்றுக்கொண்ட சிறப்பினைப்புகழும் கம்பனின் விபீடணன், "தாழ்சடைக் கடவுள் உண்ட நஞ்செனச் சிறந்தேன்" என இறைவர் முன்னர் அளித்த அடைக்கலத்தின் சிறப்பினைக் குறிப்பிடுகிறான்.

"அவ்வளவு சிறப்பு மிக்க ஈசனின் இடப்பாகம் கலந்த நீயும் என்னைக் கைவிடாது பொறுத்துக் காக்கவேண்டியது கடமை" என்பது தோன்ற "புது நஞ்சையுண்டு கறுக்கும் திருமிடற்றன் இடப்பாகம் பொன்னே! என்றார்.

(6) அவள் திருமிடற்றன் இடப்பாகம் கலந்து விளங்குதலை சகஸ்ரநாமம், 'ஸ்ரீ கண்டார்த்த சரீரிணீ' என்று புகழுகிறது. அதாவது ஸ்ரீ கண்டனின் பாதி உடலானவள்' என்கிறது.

(7) மேலிடத்தில் முறையீடு செய்து தமக்காக ஒன்றினைச் செய்யவேண்டுமென்று விண்ணப்பிக்கும் பொழுது, முன்னர்

அதுபோல் நிகழ்ந்த நிகழ்ச்சியினை எடுத்துக்காட்டி, அந்நிகழ்ச்சியில் மேலிடம் இப்படி நடந்தது என்றும் குறிப்பிட்டு விண்ணப்பிப்பது இன்றும் நம்மிடையே உலகியல் வழக்கத்தில் இருந்துவருகிறது. அதுபோல் புது நஞ்சையுண்ட வரலாற்றினைக் கூறி பொறுக்கும் தகைமையினை வேண்டுகிறார். அத்துடன் அதுவே புதியதன்று என்பதற்குச் சான்றாகவும் அமைகிறது.

## இ. மறுக்கும் தகைமைகள் செய்யினும் யான் உன்னை வாழ்த்துவனே

(1) நீ அவ்வாறு பொறுத்து அருட்செய்ய மறுத்தாலும் நான் உன்னைப்போற்றிப் புகழுவேன் " என்கிறார்.

(2) வழிபடுதெய்வம் அருட்செய்யத் தவறினால் அதனைத் தமது 'தவக்குறைவு' என்று எண்ணிவதே உண்மை அடியார்களின் இயல்பு. இறைவியே பார்வதியாக தவமியற்றும் பொழுது சிவபெருமான் மறையவனாக வந்து அவளது உறுதியினைக் காண முயன்றான். அம்போது சிவனை அடைவது அரிது என்றும் கூறுகிறான். ஆனால் அன்னையோ மீண்டும் மீண்டும் அவனை அடையும் வரை எத்தனைப் பிறவி வேண்டுமானாலும் எடுத்துத் தவமியற்றுவேன் என்று உறுதியாகக் கூறுவதைக் காண்கிறோம்.

கயிலை யாத்திரைக்குப் புறப்பட்ட அப்பர் பெருமானின் உறுதியைக் கண்டு இறைவன் அக்காட்சியினைத் திருவையாற்றில் காட்டுகிறான் அல்லவா ?

ஆகவே நீ அருட்செய்ய மறுத்தாலும் சிக்கெனப் பிடித்த உன்னைப் பணியும் தொழிலை விடாது வாழ்த்துவன் என்கிறார்.

அதுவும், கவிஞர் பெருமக்களாக இருக்கும் அடியார்கள் தமது பாமாலை பூட்டி வாழ்த்துவதை நிறுத்துவதேயில்லை. நிந்தாஸ் துதியாகவேனும் தொடர்ந்து பாடி இறுதியில் அருளினைப் பெற்றுவிடுவர்.

(3) சுந்தரர் தமக்கு வலக்கண் அளிக்காது வாளாவிருந்த இறைவனை "அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால் வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே " என்று சினங் கலந்த வாழ்த்தினைச் சூட்டுதல் இங்கு ஒப்புநோக்கி மகிழற்குரியது.

'க்ஷமாபராதம்' அல்லது பிழைபொறுத்தருளல் இப்பாடலின் பாராயண பலன் ஆகும்.

# "பண்டைய சீனவில் — வேரூன்றி வளர்ந்த இந்து மதம்"

சென்னை, மார்ச். 28. பண்டைய சீனவில் இந்து மதம் நன்ருக தழைத்தோங்கி இருந்திருக்கிறது. மக்கள் மட்டுமின்றி ஆட்சியாளர்களும் இந்துமதத்தை பின்பற்றி இருந்திருக்கிருர்கள். சீனவில் தென்கிழக்குப் பகுதியில் கண்டுபிடிக்கப் பட்டுள்ள பண்டைய காலத்தில் இந்துக் கோவில்களின் அழிபாடுகள் சில, இக்கருத்தை உறுதிசெய்கின்றன என்று சீனப் பத்திரிக்கை ஒன்றின் ஆசிரியர் யாங்ஸியானி, சென்னையில் கூறினர்.

சீனவில் கி. மு. 3 ம் நூற்ருண்டில் இருந்து இந்துமதம் பின்பற்றப்பட்டு வந்திருக்கின்றது. அப்பொழுது சீனவை ஆண்டு வந்த ஹான் வம்சத்தினர் இந்து மதத்தை மிகச் சிறப்பாகப் போற்றிவளர்த்தனர். இந்துமதத்தைமட்டுமின்றி புத்தமதத்தையும் அவர்கள் ஆதரித்துவந்தனர். கி. பி. 6 ஆம் நூற்ருண்டில் ஆண்ட சூ வம்சத்தினர் இரண்டு பரம்பரைகளுக்கு இந்துக்களாகவே இருந்திருக்கின்றனர். 7 ம் நூற்ருண்டில் இருந்து 9 ம் நூற்ருண்டு வரை ஆட்சி புரிந்த டாங் வம்சத்தினர் இந்து மதம் புத்தமதம் ஆகிய இருமதங்களையுமே ஆதரித்துப் புத்தமதம் போற்றிவளர்த்து வந்திருக்கின்றனர். இவைகளையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது புத்தமதமே இந்துமதத்தின் ஒரு பிரிவாக இருந்திருக்குமோ என்று சந்தேகப்படவைக்கிறது.

இந்துமதத்தைப் பின்பற்றிய சீனர்கள், தங்கள் தெய்வங்களையும் நமது இந்துக் கடவுளர்களின் பெயரைப் போன்றே பெயரிட்டு அழைத்துவந்திருக்கின்றனர். நாம் துர்க்கை என்று கூறும் பெண் தெய்வத்தை அவர்கள் சிபோம்பு என்றனர். நமது சிவபெருமானை அவர்கள் சர்வா என்ற பெயரில் வணங்கினர்.

இந்தியாவில் 7 ம் நூற்ருண்டுக்குப்பிறகு புத்தமதம் அழிந்து இந்துமதம் மீண்டும் தழைக்கத்தொடங்கியவுடன் சீனவிலும் இந்துமதம் மீண்டும் பரவ ஆரம்பித்தது. மகாதேவர் கோவில்கள் அதிகம் சீனவில் கட்டப்பட்டன.

எல்லாக் காலங்களையும்விட தூ வம்சத்தினர் ஆண்டகாலத்தில் தான் சீனாவில் இந்து மதம் மிகச்சிறப்பாக இருந்திருக்கிறது. வாயில் நுழையாத பெயர்களை வைக்கும் பழக்கமுள்ள சீனர்கள் அப்போது நாராயணா என்றும், சிவதாசா என்றும் பெயர்களை வைத்திருக்கின்றனர்.

கனிஷ்கர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த சீன யாத்திரீகர் பாஹியான், சீனாவில் பல இந்து கோயில்களும், இந்து மதக் கடவுளர்களை வழிபடும் பல இந்து மத பக்தர்களும், பல இந்து மத குருமார்களும் இருந்திருக்கின்றனர் என்று கூறியிருக்கிறார்கள்.

ஆனால் இதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், சீனாவில் வேற்றுநாட்டு மதமாக இருந்தபோதிலும் இந்து மதத்திற்கும் புத்த மதத்திற்கும் என்றுமே மதப்போர் ஏற்படவில்லை. இதைப் பார்க்கும்போது எப்பொழுதும் உள்நாட்டிலேயே இந்து முஸ்லிம் கலகம், இந்து சீக்கியர்கள் கலகம் என்று எப்பொழுதும் மதக்கலவரம் நடந்துவரும் 20 நூற்றாண்டு இந்தியாவை எண்ணி ஒரு நிமிடம் வேதனையுறாமல் இருக்க முடியவில்லை.

29—3—84. நன்றி.—"தினமலர்" திருச்சி பதிப்பு.

---

**கடிதம் :**

கே. எம். சுப்பிரமணியம் எம். ஏ., 31—3—1984
"தமிழகம்"
பாலவன்குடி, சிறுவயல் 623 208.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆசியுரை, ஞாயிறு ஞானோபதேசம், கேதாரப்பயணம் ஆகிய பகுதிகள் மீண்டும் மீண்டும் படித்தின்புறத்தக்கவகையில் உள்ளன. இதழின் தொடக்கமாகிய ஆசிரியர் எழுதிவரும்பகுதி அவ்வப்போதுள்ள உலகியல் பிரச்சினைகளை மக்கள் நன்கு புரிந்துகொள்ளும் வகையில் சமய உணர்வைத் தூண்டுவதாகவும் உள்ளது.

# உணர்வும் உறக்கமும்

**திரு. சபா. பரமசிவம்**

**தமிழாசிரியர்,**

**திருவாவடுதுறை ஆதீனம் மேனிலைப்பள்ளி, திருவிடைமருதூர்.**

"காலமென்பது கறங்கு போல் சுழன்று, மேலது கீழாகக் கீழது மேலாக மாறிவிடும்" என்கிறார் மனோன்மணி ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. காலச்சக்கரம் ஒரு நிலையில் நில்லாது பம்பரம் போல் சுழலும். அந்தச் சுழற்சியில் உயிர்களாகிய நாமும் சுழலத்தான் வேண்டும். பிறக்கின்றோம். வளர்கின்றோம். வாழ்கின்றோம். இறுதியில் மாள்கின்றோம். இதனிடை மனித வாழ்வில் பழமை புதுமை என்ற சொற்கள் குறுக்கிடுகின்றன.

**பழமையும், புதுமையும் :**

பழமைக்கு அநாகரிகம், மூடப்பழக்கம் அறிவுக்குப்பொருத் தமற்றவை, பயனற்றவை என்றெல்லாம் விரிவுரை செய்யப் படுகின்றது. ஆனால் புதுமைக்கு இதுதான் நாகரிகம் இன்றைய தேவையும் இதுவே. வாழ்வின் வளத்துக்குத் துணையுமாகு மென்று எக்களிப்போடு எழுதியும் பேசியும் வரப்படுகிறது. பழமையும், புதுமையும் மனிதனின் அகவாழ்விற்குத் துணை செய்வதை ஏற்றுக்கொண்டே மக்கள் மகிழ்கின்றனர். மகிழ்விக் கின்றனர். உடலுக்குத் துணையாவது என்றுமே நீடிப்பதில்லை. உயிர்க்குத் துணையானதொன்றே இம்மைக்கும், மறுமைக்கும் துணை செய்யும்.

**பண்பாடு மறத்தல் :**

பழஞ்சோறு உண்ட முன்னோர் பழக்கம்மாறியது. இட்டலி தோசை கண்டது. கஞ்சிகுடித்த பழக்கம் காப்பிக்கு வந்து விட்டது. இங்ஙனம் உணவில் மட்டுமின்றி உடையிலும் உறையுளும் மாற்றம் ஏற்பட்டது. புதுமை போற்றினர். பழமையில் நன்மை இருக்கிறதா? என்ற ஆய்வுக்கும் நேர மின்றிக் கடைபிடிக்க மனமுமின்றி மனம், மொழி, மெய்களா லான - பழமையான பண்பாட்டை மறந்து வருகிறோம்.

"கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து"

இது மனக்கால் பெறும் பண்பாடு.

" யாகாவா ராயினும் நாகாக்க ..... "

இது மொழியால் பெறும் பண்பாடு.

" ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல்...... "

இது மெய்யால் பெறும் பண்பாடு.

## ஏற்பதும் இகழ்வதும் :

இன்றைய அறிவியல் உலகம் புறவாழ்வியலில் காணும் புதுமைகளைப் போற்றுகிறது. போற்றட்டும். தவறில்லை. பழமையிலும் நன்மையுண்டு. 'காய்தல் உவத்தல் அகற்றி ஒரு பொருட்கண் ஆய்தலே' அறிவுடையோர்க்கழகு.

"தொன்மையாம் எனும் எவையும் நன்றாகா; இன்று தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா"

என்று சமயச்சான்றோராம், சித்தாந்தச்செம்மல் உமாபதிசிவம் தெரிவிக்கின்றார். "பழமை அனைத்தையும் நன்மை என்று ஏற்பதும், இன்றைய அறிவியல் ஆற்றலால் வெளிப்படும் அனைத்தையும் தீமை என்று இகழ்வதும் தவறு" என்பது பாடலின் பொருள்.

## ஈதென்ன உறக்கம் :

உணவு, உடை, உறையுள்களில்மாற்றம் இருப்பினும்உறக்கத்தில் மாற்றம் இல்லை. மக்கள்தோன்றிய நாளிலேயே உறக்கம் என்ற பழக்கமும் ஏற்பட்டது. இன்றுவரை அப்பழக்கத்தில் புதுமை இல்லை. பழமைதான் போற்றப்படுகின்றது. உறக்கமின்றேல் உயிர்வாழ்வு இல்லை. உறக்கத்தில் உறுதுயர் ஏற்படின் உறக்கம் வேண்டுமென்று உடல் மருத்துவர் உறுதுணை நாடுவோம். மிகினும், குறையினும் நோய்செய்யும் என்னே! உறக்கத்தின் தன்மை.

## உயிர்கள் அனைத்தும் உறங்குதல் :

உயிர்தாங்கிய அனைவரும் உறங்கத்தான் வேண்டும். கடல் உறங்குவதில்லை. ஒல்லென ஒலித்துக்கொண்டே இருக்கிறது. அதற்கு உயிரில்லை. மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற உறுப்புகள் இல்லை. கண்ணுகிய உறுப்பைப்பெற்ற அனைத்து உயிர்களும்உறங்குகின்றது. விழிக்கின்றது. ஊர்வன, பறப்பன நடப்பன, நீந்துவனவாகிய அனைத்து உயிர்களும் உறங்குதலை மேற்கொள்கின்றன. 'புள்ளும் உறங்கினகாண்' என அறிகின்றோம் பாடல்களால்.

**மக்களின் வேறுபடல் :**

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்ற அருமைப்பாட்டில் அமைந்த மனிதராகிய நம்மனோர் உறக்கம் விலங்குகளின் உறக்கம் போன்று அமையலாகா! விலங்குகளுக்கு நன்னெறிப்படுத்தும் அறிவு இல்லை. அறிவுடையோர் உறக்க வாழ்வியலை கண்ணிருந்தும் கண்ணால் கண்டறியும் வாய்ப்புஇல்லை. எனவே மக்களானோர் உறக்கம் மாக்களின்று வேறுபட்டதாய் இருத்தல் வேண்டும்.

**அகத்தில் காண்பதே ஆனந்தம் :**

நமக்கு அமைந்த புறக்கண்களால் அகக்கண்களைப் பெறலாம். அனைத்து உயிர்களையும் காக்கின்ற ஆண்டவன் அருள்பெறலாம். "மூகத்தில்கண்கொண்டு காண்கின்ற மூடர்காள், அகத்தில் கண் கொண்டுகாண்பதே ஆனந்தம்" என்கிறார் திருமூலர். இனித்தமுடைய எடுத்த பொற்பாதம் காணலாம் என்றனர் இறையருள் பெற்றவர்கள்.

**துஞ்சலிலும் துயர்களையும் நினைவு :**

"துஞ்சலும் துஞ்சலிலாத போதும் நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்" என்கிறது தேவாரம். துஞ்சல் இல்லாத காலத்து நினையலாம், வாழ்த்தலாம். ஆனால் துஞ்சுகின்றபோது இறைவனை வாழ்த்துமாறு எங்கனம்? 'நனவில் நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே' என்ற வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்க்குத் துஞ்சுகின்றகாலத்துக் கனவிலும் நல்லனவே தோன்றும்.

**நனவும், கனவும் :**

நிலமோ குறிஞ்சி, விலங்கினங்கள்மிகுதி. "யானையொன்று வேங்கையுடன் நனவில் (பகலில்) போர்செய்கிறது. வெற்றி பெற்றது. வெற்றிக்களிப்பில் சோர்வுடன்வேங்கைமரம் ஒன்றன் அடிப்பகுதியில் உறங்குகிறது. கனவில் வேங்கை தன்னை எதிர்படுவதாகக்கருதி வேங்கை மரத்தைவேங்கைப்புலியென்று மயங்கித்தன்தந்தத்தால்அதன் அடிப்பகுதியைக் குத்திதந்தத்தை எடுக்கமுடியாமல் துயருகிறது." என்ற காட்சி குறிஞ்சிக்கலியில் வருகிறது. "நனவில் செய்தது மனத்ததாகலின் கனவிற்கண்டு கதுமென வெரீஇ" - ஆசிரியர் கபிலர். எனவே நனவுதான் கனவிற்கு வழிவகுக்கின்றது என அறிகிறோம்.

### பெருமானின் பேரருள் :

நமது செயல் நல்ல செயலாக நனவில் அமைந்தால், அது உறக்கத்தில் கனவில் தோன்றும் சித்தம் சிவன்பால்கொண்ட சிவநேயச் செல்வர்கள்தான் நனவில் ஆற்றிய நல்ல செயல் நினைவுடன் உறங்குகின்றனர். பெருமானும் அவர்களுடன் உறங்குகின்றனர். பெருமானும் அவர்கள் கனவில் எதிர்ப்பட்டு நல்லுரை நல்கி திருவருள் புரிகிறுன்.

### நந்தனாரின் நல்லுறக்கம் :

திருநாளைப்போவாராம் நந்தனர் தில்லை செல்ல வேண்டு மென்று பலநாள் விரும்பி ஒருநாள் சென்றார். தில்லை எல்லை யடைந்தார். கோபுரம் தொழுதே சிவமே நிலவும் திருவீதியைப் பன்முறையும் வலம்வந்தார். என் இழிபிறவி உடல் இதற்குத் தடையென்று கவலையுடன் சோர்வுமிக்கவராய் தில்லைஎல்லையில் உறங்கினுர். அவர் நனவில் கொண்ட நல்ல எண்ணமும் பெரு விருப்பமும் நிறைவேற பெருமான் கனவில்வந்து தோன்றினர். அவர் கவலையும் ஒழிந்து பெரும்பேறுபெற்றுர் என்று பெரிய புராணம் பேசுகின்றது.

இவ்வண்ணம் இரவுபகல் வலஞ்செய்து அங்கெய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழிந்த அடித்தொண்டர் அயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றுர் மன்றில்நடங் கும்பிடுவது
எவ்வண்ணம் என நினைந்து ஏசறவினெடும் துயில்வார். 1

இன்னல்தரும் இழிபிறவி இதுதடையென் றேதுயில்வார்
அந்நிலைமை யம்பலத்துள் ஆடுவார் அறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடும் அருள்செய்வார். 2

இவை பெரியபுராணப் பாக்கள்.

### மறவாது வாழ்தல் :

உறக்கத்தை ஒழிக்கமுடியாது ஆனல் உறக்கத்தின் கனவி னுல் உறுதுயர்களையலாம். உறங்குவதற்கென்று ஒரு காலப் பொழுதிருக்க,பகலிலும்உறங்கிவீணேபொழுதுபோக்கும்வீணர் களைப்பார்த்து வருந்துகின்றுர்கள் அருளாளர்கள். "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே விண்ணுக் கொரு மருந்தை வேத விழுப்பொருளைக் கண்ணுக்கு இனியானை

வழிபடு. ஒருகாலும்மறவாது வாழ் என்கின்றனர். "எந்நிலையில் நின்றாலும் எக்கோலங் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் ஒருகாலும் மறவாதுவாழ்த்துதலே" மண்ணினிற் பிறந்தார் அனைவரும் மேற்கொள்ளவேண்டிய நற்பணி.

**உறக்கத்திலும் உள்ளொளி :**

ஞானிகள் உறக்கம் துறக்கத்துக்கு வழிவகுக்கும். நம் மனோர் உறக்கம் நோய்க்குவழிவகுக்கும். இறைவன் எழுந்தருளி யிருக்கும் திருக்கோயில் மணியொலி, சங்கொலி கேட்கப் பட்டால் அவன் நினைவு நமக்கு வரவேண்டும். சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறக்க வேண்டும். தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகாக உருகவேண்டும். அவன் கனியினும் இனியன், கடிபட்ட கரும்பினும் இனியன், பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும் இனியன்; தனிமுடிகவித்து ஆளும் அரசினும் இனியன்; தன்னடைந்தார்க்கு இனியன்: தித்திக்கும் பெருமான் என்றெல்லாம் அவனது இன்னமுதத் தன்மையை அருள் பெற்றவர் சொல்லக்கேட்டகாலத்து ஐந்து பேரறிவையும் கண் களால் கண்டு நனவில்வாழ்வை அமைத்துக்கொள்ளவேண்டும் பின் உறக்கத்தில் உள்ளொளிகாணலாம்.

**ஆளுடைய அடிகளின் அழைப்பு :**

மார்கழியில் பாவைநோன்பு நோற்கின்ற பாவையர்கள், ஒருவர் மற்றவரை அழைப்பதாக அமைந்த திருவாசகப் பாவைப்பாக்களில் உறக்கத்தின் தன்மை நீங்கி இறைவனைக் காணவேண்டுமென்று பேசப்படுகின்றது. அப்பாக்கள் பெண் இனத்துக்குமட்டும் உரியதன்று. அனைவர்க்கும் ஏற்புடையதே. உறக்கம்நீங்கி நாட்காலை நீராடிப் பெருமான் திருவருளைவியந்து போற்ற அழைக்கின்றார் மணிவாசகர்.

**நம் பணி சிறக்கும் :**

ஏற்றுயடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" என்கிறார் ஆளுடைய அரசு. திருக்கோயிலில் நமது ஆகம வழிபாட்டில்கூட அர்த்தஜாம வழிபாட்டையும் அமைத்து வழிபடுகின்றோம். வாயினால் வாழ்த்தி, மனத்தினில் மறவாது நினைத்துக்கொண்டு அவரவர் பணியாற்றலாம். "நம் கடன் பணிசெய்து கிடப்பதே" ஆயின் நம்பணியும் சிறக்கும் வாழ்வும் வளமாகும். இம்மை செல்வம் கிடைத்து, அம்மைக் குப் பிறவித்துயரும் நீங்கும்.

### எப்பரிசாயினும் ஏத்துமின் :

இவ்வாறெல்லாம் அருள்பெற்றவர் சொல்லிச்சென்ற செய்தி களைக் கண்டும், கற்றும், கேட்டும் உணர்கிறோம். ஆனால் செய லாற்றமுடிவதில்லை. மருளுற்ற சிந்தையை மாற்றமுடியவில்லை. என் செய்வது? விடைகாணமுடியாதது. ஒல்லும்வகை எப்பரி சாயினும் அவனை ஏத்த வேண்டுவதொன்றன்றிப் பிறிதில்லை.

அப்பனை நந்தியை ஆரா வமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே,

என்கிறது பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம்.

### திருமூலரின் வருத்தம்.

இவ்வாறன்றிப் பொன்னும் பொருளும் போதும் மெய்ப் பொருள் காணவேண்டாம். செம்பொருள் உணரவேண்டாம். சமயநெறியில் நன்மை இல்லை என்பாரை நினைந்து வருந்துகின் றார் திருமூலர். ‘இம்மைக்கு மன்னவனால் தண்டனையும், மறு மைக்குச் சிவன்சொன்ன ஆகமநூல் நெறியால் தண்டனையும் ஏற்படுமே’ எனகிறார்.

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமும் செய்யும் அம்மையில்; இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதவ் வேந்தன் கடனே.

என்பது திருமந்திரம்.

### மரணமில்லாப் பேரின்ப வாழ்வு :

“உறக்கத்தை நீக்கி உணரவல்லார்கட்கு, இறக்கவும் வேண்டாம் இருக்கலுமாமே” என்று திருமூலர் காட்டிய நெறி நின்று இவ்வுலக உறக்கம் நீங்கி மரணமில்லாப் பெருவாழ்வாம் முத்தி இன்பத்தை இறையருளால் பெற்று இன்புற்று வாழ்வோமாக.

வாழ்க சிவனருள்

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ.,
தமிழ்ப்பேராசிரியை,
தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

( மலர் 43, இதழ் 4, பக்கம் 210 இன் தொடர்ச்சி. )

இட்டமுடன் அன்றுதொட் டின்றுவரை யெனையெடுத்
  தென்சிவ னுக்கு ளுயிராய்
என்னம்மை யப்பனென வேயிருந் தெக்காலு
  மெள்ளளவு நீங்காமலே
பட்டப் பகற்போல வருள்வெயி லெறித்திடும்
  பரமசிவ மென்று முன்னைப்
பாராம னானென்று நின்ற பாதகனைப்
  பராமுக மாகியே கை
விட்டுவிட்டா லொருவ ராதரவு வேறில்லை
  விமலநீ யறியாததோ
மெய்யாகவே மெள்ள மெள்ளவே கைநெகிழ
  விட்டுவிட்டாற் பிறவியிற்
கெட்டுவிடுவே னெளியனே யின்னம் இன்னங்
  கெடாம லருள் பிழைபொறுத்தே
கெங்காத ராகௌரி பங்காள காசிவரு
  கேதார நாதகுருவே. 8

(பொ – ரை) கேதாரநாதனே! பிரியமுடன் அன்று முதல் இன்றுவரை எனையெடுத்து என் சீவனுக்குள் உயிராய் அம்மை அப்பனெனவேயிருந்து எக்காலமும் எள்ளளவும் நீங்காமல் பட்டப்பகல் போல் பிரகாசமான அருளைத் தந்திடும் பரமசிவ மென்றுன்னைப் பாராட்டாமல் நானென்ற அகந்தையோடு நின்ற பாதகனாகிய என்னை–நீயும் பாராமல்கைவிடின் வேறொருவர் ஆதரவுமில்லை. இது உனக்குத் தெரியாததோ! நீகைவிடின் எளியேன் இப்பிறவி காரணமாய்க் கெடுவேன். பிழை பொறுத்து ஆண்டருள்க.

(க - து) உன்னை உயிர்த்துணையாய் உணராது கெட்டேன்.

(கு - ரை) இப்பாடல் ஸ்ரீ குருஞான சம்பந்தரின் வாழ்வு பற்றி எண்ணிய எண்ணத்தின் வெளிப்பாடே. ஆலவாய் வழி படவந்த ஆச்சாரியர் உடலுக்குச்சொந்தமானதாய் தந்தையை விட்டு விலகி உள்ளத் தொளியின் துணையினைப் பெற்றார். பக்குவத்தால் அவர் உணர்ந்தாரே - என் அகந்தையால் நான் உணராமல் இருக்கிறேனே - என்ற இரக்கக் குறிப்புப்படக் கூறினர். அந்த அடிமன எண்ணமே இப்பாடலாகப் பரிணமித்தது எனில் அது மிகையில்லை.

இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனும் செத்து விட்டானோ — முட்டமுட்ட
பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்றோ
நெஞ்சமே யஞ்சாதே நீ.

என்ற ஔவையின் பாடலையிங்கே நினைப்பது பொருத்தமாகும்.

இரவுபகல் நல்லோர்கள் சொற்பனத் தும்பாவம்
எள்ளளவு செய்யார் கள்போல்
என்மனது மெய்மொழிகளால் மறந்தும் புண்யம்
எள்ளளவு செய்ததில்லை
பரிவினுடன் வயதுள்ள மட்டும் உபவாசமும்
பகலிரவு உறங்காமலே
பரிகார தவமேது செய்தாலும் அணுவளவு
பரிசுத்த மாவதில்லா
நரகமிருபத் தெட்டெனுங் கோடி *பற்ருது
நான்செய் பாவங்களுக்கு
நாசஞ்செய் பரிகாரம் ஒருசிவா வெனுமுனது
நாமமென்றே நம்பினேன்
கிரண சந்திர சேகரா சபா நாதனே
கிரிராஜ கயிலாசனே
கெங்காத ராகௌரி பங்காள காசிவரு
கேதார நாதகுருவே. 9

(பொ - ரை) கதிர்விடும் மதியணிந்தவனே! சபைத் தலைவனே! மலைகளுக்கரசாகிய கயிலைக்குரியோனே! கேதார நாதனே! இரவும் பகலும் நல்லோர்கள் கனவிலும் எள்ளளவு

---

* பற்ருத என்றுள்ள பாடம் பொருளின்றியுள்ளது. 72-ம் வருடம்.

பாவமும் செய்யார்கள் - அதுபோல் நான் என் மன மொழி மெய்களால் மறந்தும் புண்ணியம் எள்ளளவும் செய்ததில்லை பிரியமுடன் உலகில் இருக்கும் வரை உண்ணுநோன்பு - பகலிரவு உறங்காமல் செயும் பரிகார தவங்கள் இவற்றைச் செய்தாலும் அணுவளவு கூட பரிசுத்தமாக முடியாது. நரகம் இருபத்தெட்டெனுங் கோடியும் நான்செய் பாவங்களுக்குப் போதாது. ஆனுல் இப்பாவங்களை நாசஞ் செயும் பரிகாரமாக சிவனென்ற உனது ஒப்பற்ற நாமத்தை நம்பினேன்.

(க - து) அளவிலடங்காப் பாவங்களையும் போக்கவல்லது சிவநாம மந்திரம்.

(கு - ரை) கனவிலும் நல்லோர் பாவம் செய்யார் - நானது போல் மறந்தும் புண்ணியம் செய்யவில்லை - என்ற கருத்து அழகிது. 'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப் பெற்றேன்' - என்ற திருவாசகத்தை நினைக்க. முதல்வரியில் 'செய்யார்களது போல்' - என இருக்க வேண்டும். மூன்ருவது வரியில் பற்ருத - என்பது 'பற்ருது' - என இருப்பின் பொருளுணர்வு வரும். மூன்ருவது வரியில் 'ஒருசிவா' வில் உள்ள 'ஒரு' வைநாமத்துடன் சேர்த்துப் பொருள் சிறப்புப் பெறலாம்.

விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்வழல்
உண்ணிய புகிலது ஒன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சி வாயவே.

என்ற அப்பரின் பாடல் கருத்தை இங்கே தெளிவாகக் காணலாம். (4-11-3.)

நரகம் இருபத்தெட்டு கோடி. நரகவகை இருபத்தெட்டினை இருபத்தெட்டு கோடி என்ருர் முப்பத்துமூன்று தேவர்களை முப்பத்து முக்கோடி என்பது போல, அபிதான சிந்தாமணி - 931 - 933 பக்கங்களில் விரிவாக இருக்கிறது. இரண்டு வகையாகவும் கூறப்படுகிறது. இந்த இருபத்தெட்டும் 1. தாமிச்ரம் 2. அந்ததாமிச்ரம். 3. ரௌரவம். 4. மகாரௌரவம் 5. கும்பிபாகம் (ஊன் தின்றவர்கள் சேரும்நரகம்) 6. காலசூத்திரம் (தாய் தந்தையை வதைத்தவர் சேருமிடம்) 7. அசிபத்ரவனம், 8. பன்றிமுகம். 9 அந்தகூபம். 10. கிருமிபோஜனம். 11. அக்கி குண்டம். 12. வச்ரகண்டம். 13. சான்மலீ. 14 வைதரணி. 15. பூயோதம் 16. பிராணரோதம். 17. வைசசீ. 18. லாலாபக்ஷம். 19. சாரமேயாதனம். 20 அவீசி. 21. பரிபாதனம். 22. க்ஷாரகர்த்தமம். 23. ரக்ஷோகணம். 24. சூலப்ரோதம். 25. தந்தசூகம்.

26. வடாரோகம் 27 பிரியாவர்த்தனகம் 28. தூசிமுகம் இவைகள் விளக்கத்துடன் இருக்கின்றன.

நாட்கமல மனையதின் திருவடித் தாமரையில்
நவிலும் விண்ணப்ப முத்தி
நகராகும அவிமுத்தம் அகலா திருந்துன்னை
நான்பாட வேணும் எந்தை
ஆட்கொண்டு முன்னிற்க வேணும்மணி கன்னிகையில்
ஆவிவிட வருள் திரும்ப
அவதரித் துழலாதுன் அடியடைய வேணுமிங்கு
அவதரித்தா லுனடியார்
தாட்பொடிகள் என்தலையின் மேற்பரவ இறுமாந்து
சர்வசங் கதகியாகியமய்ச்
சகச பரமானந்த சுகபரவ சமதாய
தபோதனர்கள் குற்றேவலே
கேட்டவர முதவுமெதன் கமலையும் கயிலையங்
கிரியுமுறை சிவலோகனே
கெங்காத ராமெளரி பங்காள காசிவரு
கேத்தார நாததருவே. 10

(பொ - ரை) கேதார நாதகுருவே! நாட்காலையில் பூத்த தாமரை போன்ற நின திருவடியில் விண்ணப்பமொன்று சொல்கிறேன். முத்திநகராய காசியை விட்டு அகலாதிருந்து நான் உன்னைப் பாட நீ ஆட்கொண்டு முன்னிற்க வேண்டும். மணி கன்னிகைத் துறையில் உயிர்விட வேண்டும். மீண்டும் பிறந்து உழலக் கூடாது பிறந்தால் உன்னடியாரின் திருவடித் தூசி என் தலைமேல் பட இறுமாந்து அக்கூட்டத்துள் - எல்லாப் பற்றும் விட்டவர்களும் இயல்பான ஆனந்த பரவச முற்ற தபோதனர்களுமாயுள்ளவர்களுக்கு குற்றேவலே செய்து மகிழ வேண்டும். கேட்டவரம் உதவுகின்ற கமலையிலும் கயிலையிலும் உறைகின்ற சிவலோகனே! இவ்வரத்தினை அடியேனுக்குத்தருக.

(க - து) பிறவாதிருக்க வரம்தா. பிறந்தால் அடியார் பணி செய்ய ஆளாக்கிடுக.

(கு - ரை) நாட்கமலம்-நாட்காலையில் பூத்தமலர் உவமை, திருவடித் தாமரை - உருவகம். உன்னடியார் தாட்பொடி தலையின்மேல் பரவ தொண்டர் அடிப்பொடி தோயல் சிறப்பு. தொண்டரடிப் பொடி போற்றியவர் பெயர் வைணவத்தில் தொண்டரடிப்பொடி ஆழ்வார்.

பாசுபத னருள்பெறும் வசிட்ட முனி யென்கின்ற
  பரமசிவ யோகிபணியப்
பரவு கேதாரமென ஒரு வார ணசியிற்
  பரிவுடன் வந்திருந்தாய்
தேசுபெறு கமலைவரு ஞானசம் பந்தனருள்
  சேர்குமர குருபரனெனும்
சிவானந்த மாமுனிக் கடையாள மருவியுன்
  * திருக்கோயில் கட்டுவித்தாய்
ஆசுகவி நின்புகழ்கள் பாட அடியேனையும்
  அழைத்துவந் தன்பருடனே
ஆனந்த கானமக லாமல் வைத் தனையுனது
  அருட்கருணை கூறவெளிதோ
கீசக மணித்திரள்கள் வீசுதிரை மோதிவரு
  கங்கை நதியின் கரையில் வாழ்
கொங்காத ராகௌரி பங்காள காசிவரு
  கேதார நாத குருவே. 11

(பொ - ரை) மூங்கில்மணிகள் அலையில் மோதிவரும் கங்கைக்கரையில் வாழும் கங்கையைத் தரித்தவனே! உமையொரு பாகனே ! கேதார நாதனே ! சிவனருள் பெற்ற வசிட்டர் எனும் மகாமுனிவர் பணியும்படி வந்திருந்தாய். புகழ்பெற்ற கமலைவரு (ஞானப்பிரகாசரின் சீடராம்) ஸ்ரீ குருஞானசம்பந்தரின் அருள் பெற்ற குமரகுருபரரெனும் சிவானந்த மகாமுனிக்கு அடையாளமருளி உன் திருக்கோயிலைக் கட்டுவித்தாய். ஆசுகவியாக நின்புகழைப்பாட அடியேனையும் அழைத்துவந்து அன்பருடன் கூட ஆனந்தகான மகலாமல் வைத்தனை. இப்படியான உன்னருளைக் கூறுவது எளிதோ.

(க - து) உனக்கென ஒரு கோயிலையும் கட்டிக்கொண்டு அடியாரையும் பக்திசெய கூட்டிக்கொண்டாய். இக்கருணையை எப்படிப் புகழ்வேன்.

(கு - ரை) வசிட்டன் பணிவதற்காக கேதாரகட்டத்தில் இறைவன் வந்திருந்தான் கருடன் பறக்குமிடத்தில் நிலம்

* ஸ்ரீகாசியில் ஸ்ரீ குமாரசுவாமி மடத்திற்குச் சொந்தமானது இத்திருஸ்ரீகேதாரநாதர் கோயில்.

தருவேன் - என்ற ஔரங்கசீப்பின் வார்த்தைக்காக அதுவரை கருடன் பறக்காத காசியில் அதனைப் பறக்கச் செய்து அந்த எல்லையில் தன் கோயிலை குமரகுருபர முனிவரைக் கொண்டு கட்டுவித்துக் கொண்டான் ( அனுமன் சிவலிங்கப்பிரதிஷ்டைக் காக லிங்கம் தேடிவரும்போது கருடன் பறந்து பல்லி சொன்ன நற்சகுனம் கண்டு காசிவிசுவேசுரரை வாலில்கட்டி இழுத்தானும். பைரவரின் காவலால் அனுமன் முயற்சி பலிக்கவில்லை. கோப மூற்ற அனுமன் பல்லி ஊமையாக, கங்கை தாண்டி கருடன் வரக்கூடாதென்பதாக சாபம் தந்தானும் ) கமலை ஞானப்பிரகா சரின் சீடர் ஸ்ரீ குருஞானசம்பந்தரே 4 ஆவது பட்டத்து ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணிதேசிகர்தான் குமரகுருபரரின் ஆசாரியர். இருந்தும் இவரையும் ஆதிபரமாச்சாரியராகவே எண்ணும் பாவனை - மிக உயர்ந்தது. ஆனந்தகானம் - காசி 'ஆனந்தகானந் தொடுத் திங்குள வான சைவத்தானம் பலவுந் தொழுதற் பரமாகி வந்தேம்' - திருவிளை. கல்யாணை - 8 கீசகமணி - மூங்கில்மணி.

(தொடரும்)

---

**கடிதம்:**

**சமயநெறிக் கழகம்,**

**" திருவள்ளுவர் இல்லம் "**

நெ. 78/4, இராமையன் காலனி, திருப்பூர்-2.

* ஞானசம்பந்தம் இதழுக்கு சென்ற ஆண்டு சந்தா புதுப் பிக்காமலேயே தாங்கள் தொடர்ந்து இதழ் அனுப்பிக்கொண் டிருந்த தயாள உள்ளத்திற்கு எங்களுடைய நன்றியினை தெரிவித்துக்கொண்டு இந்த ஆண்டிற்கு முரிய சந்தாவும்சேர்த்து (இரண்டு ஆண்டுக்கும் சேர்த்து) ரூ. 24/- M O. செய்து இருக் கிறேன். ஞானசம்பந்தம் இதழ்மூலம் தாங்கள் ஆற்றிவரும் ஆன்மீக நெறிகளுக்கு எங்களது வாழ்த்துக்கள். ஆசிரியர் அவர்களுக்கு எங்கள் அன்பு வேண்டுகோள்:- ஞானசம்பந்தம் இதழில் "திருக்குறள்", திருவள்ளுவர் இயற்றிக்கொடுத்த தமிழ்மறையினை தொடர்ச்சியாகப்பாமரமகனும் நெஞ்சில் பதிய வைத்துக் கொள்ளும் அளவிற்கு விரிவுரையுடன் தெள்ளிய விளக்கங்களுடன் ஒருபகுதிதொடங்கவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். தமிழ்மொழிக்கு பெருமைசேர்க்கின்ற வகையில் ஆன்மீகப் பணியாற்றிவரும் தருமையாதீனத்திற்கு எங்களின் மனமார்ந்த வணக்கங்களைக் கூறிக்கொள்கிறோம்.

16—4—84. **தி. ச. பழனிசுவாமி,**

# கேதாரம் நோக்கி....!

## திரு. வி. ஆறுமுகம் ஐ. ஏ. எஸ். (ஓய்வு)

( மலர் 43, இதழ் 4, பக்கம் 217 இன் தொடர்ச்சி )

### 9. கேதாரப்பயணம்

மாலை மணி 7–45 குருவருள் துணைநின்றது; வருத்தம் நீங்கியது! காணோமே என்று கவலைப்பட்டவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

கணேஷ்தாஸ் என்ற குஜராத்திக்காரரும் அவர் மனைவியும் தவிர மற்றவர்கள் வந்துவிட்டனர். அவர்கள் இந்தி தெரிந்தவர்கள். ஜானகிபாய் சட்டியில் தங்கி வருவார்கள் என்பது எங்கள் நம்பிக்கை.

நாங்கள் இரவு உணவை முடித்துக் கொண்டோம், சயன சட்டிக்கு வந்தோம்; இரவு தங்கினோம்.

கணேஷ்தாஸ் அவர் மனைவியுடன் காலையில் வருவார், ஆகையால் அவரை அழைத்துவர எங்களுடன் வந்தவழிகாட்டி ஒருவரை அனுமன் சட்டியிலேயே விட்டுவந்தோம்.

அனுமன் சட்டியிலிருந்து யமுனோத்ரி வரை 13. கி. மீ. தூரம் தண்டியில் சென்ற ஒன்பது பேருடன், நடந்தே சென்று எல்லாரையும் இரவு 8 மணிக்குக் கொண்டுவந்து சேர்த்த பெருமையும் பொறுப்பும் மிக்கவர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தில் பணி புரியும் திரு. பாலு. அவர்களுக்கு இந்தக் குழுவினரில் 9 பேர் மிகவும் கடமைப்பட்டவர்கள்.

மறுநாள் செப்டம்பர் 24 சனிக்கிழமை. காலை 4 மணிக்கே எழுந்து அத்திப்புலியூர் முதலியார் குடும்பத்தினர் அருமையாக காலை உணவைத் தயாரித்து விட்டார்கள். எல்லாரும் நீராடினோம். உணவு உண்டோம்.

கணேஷ்தாஸ் குடும்பத்தினர் வருகைக்காகக் காத்திருந்தோம்! அவர்கள் காலை 9 மணிக்கு வந்தார்கள், 10 மணிக்குப் பர்கோட்டை விட்டுப் புறப்பட்டோம். புறப்படும்போது மூடுபனி; சிறுதூரலும் இருந்தது. பர்மாதால், தர்சூல் வழியாக மாலை 4 மணியளவில் தெகிரி வந்தடைந்தோம். மூடுபனியும் தூரலும் நின்றன.

மாலை 6 மணியளவில் ஸ்ரீநகர் சேர்ந்தோம், இது பாகிஸ் தானியர் தொல்லைகொடுத்துக்கொண்டிருக்கும் காஷ்மீரிலுள்ள ஸ்ரீநகர் அன்று, அந்தப் பெயரைத் தாங்கியிருக்கும் வேறு ஒரு முக்கியமான நகரம்.

ஸ்ரீநகர் என்னும் இப்பகுதி ரிஷிகேசிலிருந்து 105 கி. மீ. தொலைவில் உள்ளது. கடல் மட்டத்திலிருந்து 2100 அடி உயரம் அலகநந்தா நதிக்கரையில் உள்ளது. பலபள்ளிகளும் பல்கலைக் கழகமும் இங்கு உள்ளன. இவ்விடத்திலிருந்து திட்டி கணவாய் 264கி. மீ. தொலைவில் உள்ளது "இங்கு இட்டிலி, மசால்தோசை கிடைக்கும்" இப்படி ஒரு விளம்பரத்தை ஸ்ரீநகரில் கண்டோம்; மனத்திலே மகிழ்ச்சி! கால்கள் தானாகவே உணவு விடுதியை நோக்கிச் சென்றன.

மூன்று ரூபாய்க்கு ஒருதோசை - ஒருரூபாய் எடைகூட இல்லாத இட்டிலி ஒரு ரூபாய் - சுவை? கேட்கக்கூடாது! தனி யாகப் பணம் கொடுத்தால் கூடக்கிடைக்காது? மிகமோசம்! அன்றிரவு ஒருநல்ல விடுதியில் தங்கினோம்.

ஞாயிறு காலை 7-30 மணிக்கு ஸ்ரீநகரை விட்டுப் புறப் பட்டோம். அலநந்தா கரையில் அடைந்துள்ள சாலை வழியே ருத்ரப்பிரயாக் அடைந்தோம்; 34 கி. மீ. பயணம் அது கோதார நாத்திலிருந்துவரும் மந்தாகினி நதியும், பத்ரிநாத்திலிருந்துவரும் அலகநந்தா நதியும் சங்கமாகும் இடம் இது.

எங்களுக்கு வழிகாட்டியாக வந்தவர்கள் இங்கு வந்த போதுதான் வாய் திறந்து சிலவார்த்தைகளைச் சொன்னார்கள். பயணத்தின்போது துணையாக வந்தவர்களே ஒழிய எந்த இடத்தின் சிறப்பையும் வாய்திறந்து சொன்னதே இல்லை.

இருநதிகளும் சங்கமம் ஆகுமிடத்தில் ஒருபுகைப்படம் எடுத்துக் கொண்டோம்; நாங்கள் வந்த பஸ்ஸில் ஒருவீல் பட்டை ஒடிந்திருந்தது. அதைச் சரிசெய்தார்கள். பஸ் 10-40 க் குப் புறப்பட்டது. 2 மணி நேரம் தாமதம் ஆயிற்று.

நல்ல காலநிலையில் சூரிய ஒளிபட பஸ் நன்கு ஓடிக் கொண்டிருந்தது. திடீர் என டயர் வெடித்தது போன்ற ஓசை! நாங்கள் அதிர்ச்சியடைந்தோம். மறுபடியும் தடையா என்று! ஓட்டுநர் கூட அதிர்ச்சியடைந்தார். அடுத்த இரண்டு நிமிடத் தில் மீண்டும் பெரிய சத்தம்! அப்போது தான் தெரிந்தது நாங்கள் சென்று கொண்டிருந்த பகுதியின் பக்கத்தில் இருந்த மலைப்பகுதியை வெடிவைத்துத் தகர்க்கிறார்கள் என்று!

வழியில் அகஸ்தமுனி என்று ஓர் ஊர். இங்கு அகத்திய முனிவர் தவம் செய்தார் என்று கூறுகிறார்கள். வழிநெடுகிலும்

கோதுமை, கேழ்வரகு முதலிய பயிர்களின் வளமையைக்காண முடிந்தது. கேதாரத்துக்கு முன்பு 45 கி. மீ. தொலைவிலுள்ள குப்த காசியை அடைந்தோம்.

குப்தகாசி 5500 அடி உயரத்தில் உள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இனிய ஊர். கேதார நாதர் கோயிலில் பூசைசெய்யும் பண்டாக்கள் இவ்வூரை ஒட்டியுள்ள கிராமங்களில் வசிக்கிறார்கள். இவ்வூரை அடுத்துள்ள நளா என்ற சிற்றூரில் துர்க்கா தேவியை லலிதாதேவி என வழங்கி வழிபடுகிறார்கள்.

குப்தகாசியிலிருந்து சோனப்பிரயாக் சென்றோம். வழி நெடுகப் பச்சை நிறத்தின் பரவல்; அருவிகளின் இன்னோசை; குளுமையான காற்று - சாலைமட்டும் சரியில்லை; பழுதுபார்க்கிறார்கள். சோனப்பிரயாக் 6800 அடி உயரத்திலுள்ள பகுதி.

எங்கள் பஸ்பயணத்தின் நிறைவாக கௌரிக்குண்டம் அடைந்தோம். கேதாரத்திற்கு முன் 14 கி. மீ. தூரமுள்ளது இவ்விடம். கேதாரம் செல்வோர் பஸ், காரில் அதற்கு மேல் போகச் சாலை வசதி இல்லை. எங்கள் திட்டத்தின்படி மறுநாள் அந்த இடத்தை அடைந்திருக்க வேண்டும். ஒருநாள் முன்னதாகவேசென்றடைந்ததால்தங்கும்இடம்பிரச்சினை ஆகிவிட்டது சாமான்களைஎல்லாம் இறக்கினோம், மிகவும் சிரமப்பட்டு மாலை 3 மணிக்கு ஓர் இடத்தைப் பிடித்துப் பொருள்களைக் கொண்டு சேர்த்தோம்.

மாலை மணி மூன்றாகிவிட்டமையால் அன்று கேதாரப் பயணம் எங்கள் எல்லோருக்கும் கிட்டவில்லை. பெண்களும் எங்கள் குழுவில் இருந்தமை இதற்கு ஒருகாரணம்.

"பெண்களை அழைத்துக் கொண்டு குதிரையிலும் தண்டியிலும் இரவு நேரத்தில் போவது சரியில்லை; எல்லோரும் கௌரிகுண்டத்தில் தங்கி நாளைகாலை புறப்பட்டு வாருங்கள்" என்று எங்களுக்குக் கயிலைமாமுனிவர் அறிவுரை அருளினார்கள்; கூடியவரை எச்சரிக்கையாய் இருப்பது நல்லதுதானே!

அன்று காசிவாசி சுவாமிகள் கயிலைமாமுனிவருக்கு ஜன்ம நக்ஷத்திரத் திருநாள். அவர்கள் கவுரி குண்டத்தில் வெந்நீர் ஊற்றில் மஞ்சனமாடி மாலை 4 மணிக்கு கேதாரம் புறப்பட்டார்கள். அன்று அவர்களுடன் எங்கள் குழுவிலிருந்த சிதம்பரம் இராமநாதன் செட்டியார், பங்கஜம், சுரேஷ் ஆகியோரும் கேதாரம் புறப்பட்டனர்.

மறுநாட்காலை மற்றவர்களை அழைத்துக் கொண்டு கேதாரம் வந்தடையுமாறு எனக்கு உத்தரவு கவுரிக்குண்டத்தில் நீராடினோம். நாம் நாளை கேதாரம் அடைய இறைவனை துணைபுரிய வேண்டும் என்ற இனிய பிரார்த்தனையோடு அன்று இரவு உறங்கினோம். (தொடரும்)

# எதிர்காலம்


## ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


(இரக்தாக்ஷி ஞூ சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

( 15—4—1984 முதல் 13—5—1984 முடிய )

| | | | |
|---|---|---|---|
| சு | சூ பு | ரா | ல |
| | இராசி | | |
| | | | சந் |
| கு | கே செ | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | சூ பு | ல/ ரா செ | |
| | அம்ஸம் | | |
| | | | |
| சனி | சந் கே | சு | கு |

கதகலியுகம் 5085க்கு கலிசுத்ததினம் 1857338 நாள் 14 நாழிகை 35 வினடி, இக்கணக்கில் ஸ்ரீ ரக்தாக்ஷி சித்திரைமீ 1உ சுக்கிர வாரம் பூர நக்ஷத்திரம் கெளலவகரணம் கூடியகாலத்தில் அதாவது கலிசுத்தினத்தை 7 ஆல் வகுத்துவந்தமீதி சுக்கிராதியாகக்கிழமைகணக்கிட முதல்நாள்சுக்கிரவாரத்தில் 14 நாழிகை 35 விநடிக்கு, மிதுன லக்கினத்தில் சிம்மராசியில் ரிஷப அங்கிசையில் ஸ்ரீ லோக ரட்சகரான சூரிய பகவான் லோகம் உய்ய வேண்டி மீனராசியிலிருந்து மேஷராசிக்கு சங்கிரமணமாக பிரபவாதி 58வது இரக்காக்ஷி ஞூ சித்திரை மாதப்பிரவேசம் செய்தருள்கிருர். இரக்தாக்ஷி வருஷத்திற்கும் ராஜா சந்திரன் ஆகிருர் சித்திரைமாத சங்கிரமண வாராதிபதி சுக்கிரன் நவநாயகர்களில் மந்திரியாகஇருந்து உலகத்தை சம்ரக்ஷிக்கின்ருர் சங்கிரமண காலத்தில் நவநாயகர்களாக உள்ளவர்களின் ஸ்திதியினுல் இவ்வாண்டின்பலன் எங்கும் பூமிசெழித்திருக்கும்

அரசர்களுக்குள் ஒருவருக்கொருவர் சவால்கள் சிம்மகர்ச்சனை போன்று இருப்பினும் முடிவில் சர்வேஸ்வரனுடைய அருளில் பரஸ்பரம் ஆகும். லோகில் ஈஸ்வரனருளில்வந்து சிவபுண்ணிய கைங்கர்யங்களை செய்து, உலகம் நீடிக்கலுக்கு ஆதாரமாக உள்ள உத்தம சீலர்களை முன்னிட்டு உலகில் நல்ல நீர்வளம் நிலவளம் ஏற்படும். லோகில் எங்கும் பரஸ்பரம் ஏற்பட்டு பிரஜைகள் ஒற்றுமையாகவும் க்ஷேமமாகவும் வாழ்வார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் ஈஸ்வர கட்டளையில் வந்து சிவசமயம் பரிபாலிக்கின்ற சிவஞான குருமகான்கள், குருமகாசந்நிதானங்கள் சிவசமய ஆசார விதி முறைகளை உலகத்திற்கு போதித்துப் அருள்வார்கள். சிஷ்ய கோடிகளை உலகெங்கும் உள்ள கிளை மடங்களுக்கு அதிபதி களாக நியமித்து, திருச்சபைகள் அமைத்து, சிவசமயம் பரவ ஆதாரம் நல்கி ஆசியருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவா லயங்களில் நித்தியம் ஆறுகாலபூசைகள் நியமவிதிமுறைகளின் படி நடந்து வரும். தேவாலயங்களில் லோகோபகார உற்சவங் கள், தெய்வ சிந்தனையாக உபன்யாசங்கள், தெய்வத்திருவிளை யாடல் கதாபிரசங்கங்கள் இனிது நடைபெறும். சுவாமி வீதி யுலாக்காட்சி நடைபெற்றுச் சிறப்புறும் பிரஜைகள் ஈஸ்வர தரிசனம் செய்து மகிழ்வர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி. கார்த்திகை - ¼

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் நற்பலனை நடக்கும். குடும்பாபி விருத்தியில் தனம் பாக்கியம் பெருகும் இலக்ஷிபப் போக்கில் நல்ல காரியங்களில் ஈடுபாட்டினை ஏற்படுத்தும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பும்நல்விஷய உரையாடல் செய்தல் ஆகும். மே 8உ க்குமேல் அரசாங்கத்திலிருந்து நற்செய்திவரும். எல்லா காரியங்களும் பெருமதிப்பாக நடந்துகொண்டிருக்கும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஏப்ரல் 14, 15, 16, 17, 23, 24, 25, 26, 30 மே 1, 2, 5, 6, 11, 12 13 தேதிகளில் தன தாயம் தெய்வதரிசனம், புகழ், நற்காரிய சிந்தனை ஏற்படும். ஏப்ரல் 18, 19 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி ஞ' இராசி ஆதாயம் 5, விரயம் 11, ஆரோக் கியம் 5, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 2, இராஜ கோபம் 6, சுகம் துக்கம் சமம்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$- உரோகிணி - மிருகசீஷம் $\frac{1}{2}$
( இ ஊ. ஏ. - ஒ. வ. வி. வு. - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் விசேஷ தனலாபங்களை ஏற்படுத்தும். அதற்கேற்ப சுபச்செலவுகளும் ஏற்படும். பொது நலக்காரியங்களை ஏற்று நடத்தும். புத்திரர்களின் முன்னேற்றத்திற்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்யும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவு ஏப்ரல் 16 17, 18, 19, 25, 26 27, 28, 29 தேதிகள் மே 2, 3, 4, 7, 8, தேதிகளில் தனதாயம், கண்யம், ஜெயம் நல்லோர் பிரபலஸ்தர் போற்றுதல் ஆகிய நற்பலன்கள் ஏற்படும். ஏப்ரல் 20, 21, 22. தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

இரக்தாக்ஷி இராசி ஆதாயம் 14, விரயம் 2, ஆரோக்கியம் 2, அனாரோக்கியம் 5, இராஜபூஜிதம் 1, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 1.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$
( கா. கி. - கு. க. ஙு. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல தனவருமானங்கள் வந்து கொண்டிருக்கும். சகோதரருக்கு உயர்வு தரும். வித்தியா வியாபாராதி கலைத்துறைகளில் நற்பலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். வீடு வாகனங்களில் நவீனம் ஏற்படும். புதிய வஸ்துக்கள் வாங்குதல் ஆகும். தார புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 13, 18, 19, 20, 21, 22, 27, 28, 29, 30 மே 1, 5, 6, 9, 10 தேதிகளில் தனதாயம், காரியசாதனை, நல்ல சௌக்கியம் ஆகிய நற்பலன் ஏற்படும். ஏப்ரல் 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம், மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி இராசி ஆதாயம் 3, விரயம் 2, ஆரோக்கியம் 4, அனாரோக்கியம் 1, இராஜபூஜிதம் 1, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 1.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ - பூசம் - ஆயில்யம்.
( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வரும். வித்தியா வியாபாராதிகளில் நியாய வழியில் நல்ல செலாவணியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும். அரசாங்கத் தொடர்புள்ள விஷயங்களில்

உடனுக்குடன் நல்ல சமாச்சாரம் வந்து கொண்டிருக்கும். வீடு வாகனங்களில் நவீன அமைப்பு ஏற்படும். தாரபுத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 20, 21, 22, 23, 24, 30 மே 1, 2, 3, 4, 7. 8, 11, 12 தேதிகளில்தனுதாயம் தரும். நற்செய்திவருதல், புதியவிஷய ஆலோசனை, இஷ்டசித்தி ஆகிய நற்பலன் ஆகும். ஏப்ரல் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ் டமம் மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

இரக்தாக்ஷி ஸ்ரீ இராசி ஆதாயம் 2, விரயம் 8, ஆரோக் கியம் 1, அனுரோக்கியம் 2, இராஜபூஜிதம் 6, இராஜகோபம் 1, சுகம் 3, துக்கம் 1.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼
( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல தனவருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரபலமும் நல்ல முன்னேற்றமும் ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல அனுபோகம் தரும். அரிய பெரிய காரியங்களை துவங்கச்செய்யும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 13, 16, 17, 23, 24, 25, 26, 27 மே 2, 3, 4, 5, 6, 9, 10, 13 தேதிகளில் நல்லன ஏற்படும். ஏப்ரல் 28, 29 தேதி களில் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன்.

இரக்தாக்ஷி ஸ்ரீ இராசி ஆதாயம் 14, விரயம் 8, ஆரோக் கியம் 6 அனுரோக்கியம் 5, இராஜபூஜிதம் 6, இராஜகோபம் 1, சுகம் 3, துக்கம் 3

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை
( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானங்கள் கணிசமாக வந்து கொண்டிருக்கும். கண்டிப்பு நேர்மையை வற்புறுத்தலினால் சிஷயர்கள் பணியாளர்கள் மனக்கசப்புறுவர், பின் நல்லன அடைந்து போற்றுவர். ஏப்ரல் 22 தேதிக்குள் பூமி பிராப்தியில் நல்லன ஏற்படும். இல்லத்தில் சாஸ்திரோக்த காரியங்கள் நடக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 14, 15, 18, 19, 25, 26, 27, 28, 29 மே 5, 6, 7, 8, 11, 12, 13 தேதிகளில் தனுதாயம காரிய ஜெயம், நல்ல ஆலோசனை ஏற்படும். ஏப்ரல் 30, மே 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் ஏற்படும்.

இரக்தாக்ஷி ஞ இராசி ஆதாயம் 2, விரயம் 2, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 1, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 1.

7. துலாம்:- சித்திரை ½ - சுவாதி- விசாகம் ¾

(ர.ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தனவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் முன்னேற்ற ஸ்திதி ஏற்படும். தேகத்தில் உஷ்ணவாத நலிவு வந்து குணமாகும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் நன்றாக இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 13, 16, 17, 20, 21, 28, 29, 30 மே 1, 7, 8, 9, 10 தேதிகளில் நற்பலனளிக்கும். மார்ச்சு 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி ஞ இராசி ஆதாயம் 14, விரயம் 2, ஆரோக்கியம் 2, அனுரோக்கியம் 5, இராஜபூஜிதம் 1, இராஜகோபம் 2, சுகம் 6, துக்கம் 1.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவருமானம் வந்துசேரும். பூமி இயந்திர வாகனங்களில் பணம் முடங்கச்செய்யும். வித்தியா வியாபாராதிகளில் அல்லது உத்தியோகத்தில் முன்னேற்றமும் உயர் அந்தஸ்தும் அளிக்கும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். புத்திரிக்கு சுபம் ஏற்படும். பெண்மகவு ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஏப்ரல் 13, 14, 15, 18, 19, 23, 24, 30 மே 1, 2, 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளுல் மத்திமபலன் தரும்.

இரக்தாக்ஷி ஞ இராசி ஆதாயம் 5, விரயம் 11, ஆரோக்கியம் 5, அனுரோக்கியம் 1, இராஜபூஜிதம் 2, இராஜகோபம் 6, சுகம் துக்கம் சமம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனூர்ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானங்கள் கண்யத்திற்கு ஏற்ப வந்து

கொண்டிருக்கும். ஏப்ரல் 22 தேதியளவில் பூமி அல்லது இயந்திர சாதனம் ஒன்று வரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் இருந்துவரும். மேமீ 8உ அளவில் வயிற்றுபோக்கு நலிவு வந்து உடன் குணமாகும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய நலம். தாம்பத்திய வாழ்வில் சுமூகம் நிலவும். ஏப்ரல் 14, 15, 16, 17, 20, 21, 22, 25, 26 மே 2, 3, 4, 5, 6, 11, 12, 13 தேதிகளில் மிகுந்த நற்பலன் தரும். மே 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி ஷு இராசி ஆதாயம் 8, விரயம் 2, ஆரோக்கியம் 3, அனுரோக்கியம் 3, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம்
( போ. ஜ. ஜி. - கி. கு. கே கோ. கா. கி - )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். நல்ல தன வருமானங்கள் வந்துகொண்டிருக்கும். நல்ல ஆபரணம் வாங்குதல் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் பிரசித்தம் ஏற்படும். சுபவிசேஷங்களில் தர்மகாரியங்களில் நல்லசேவையும் பொருட்செலவு ஏற்படுதலும் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 16, 17, 18, 19, 23, 24, 28, 29 மே 5, 6, 7, 8, 13 தேதிகளில் விசேஷ நற்பலன்களை ஏற்படுத்தும். ஏப்ரல் 13 மே 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

இரக்தாக்ஷி ஷு இராசி ஆத்ாயம் 11, விரயம் 11, ஆரோக்கியம் 4, அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 2 இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாம் ¾
( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானங்கள் வெகுவாக வந்துகொண்டிருக்கும். இல்லத்தில் நல்ல காரியம் நடக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பும் மேடை பிரசங்க கீர்த்தியும் ஏற்படும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு, தெய்வதரிசனம் செய்தல் ஆகும. ஏப்ரல் 29உ ஆனல் பெண்மகவு ஒன்று, ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமூகம் நிலவும். ஏப்ரல் 13 18, 19, 20, 21, 22, 25, 26, 30 மே 1, 5, 6, 7, 8 தேதிகளில் தனதாயம் ஜெயம், உற்சாக சம்பவம், மேலான சிந்தனை ஏற்படும். ஏப்ரல்

14, 15 மே 11, 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி ஸ்ரீ இராசி ஆதாயம் 11 விரயம் 11, ஆரோக்கியம் 4 அனுரோக்கியம் 4, இராஜபூஜிதம் 2, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சீ. )

மீனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். தன வருமானங்கள் கணிசமாக வரும். சகோதரீ வழியில் ஓர் வருத்தம் வந்து நீங்கும். ஓர் விபத்து வந்து தப்பும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்ய நலம். வித்தியா வியாபாராதிகளில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும் தாரபுத்திரர்களின் சௌகரியம் நன்றாக இருந்துவரும். ஏப்ரல் 13, 14 15 20, 21, 22, 23, 24, 28, 29 மே 2, 3, 4, 9, 10, 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஏப்ரல் 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

இரக்தாக்ஷி ஸ்ரீ இராசி ஆதாயம் 8, விரயம் 2, ஆரோக்கியம் 3, அனுரோக்கியம் 3, இராஜபூஜிதம் 5, இராஜகோபம் 6, சுகம் 3, துக்கம் 3.

---

## கங்கை மகிமையினும் சிவகதை கேட்கும் மகிமை சிறந்தது

கங்கை சிவமூர்த்தியின் முடியில் தலைமையாகச் சிறந்திருக்கும் சிறப்புடையதாயினும், தன்னிடத்து மூழ்கும் ஆன்மாக்களுடைய பாவமொன்றைமட்டும் போக்குவதன்றி அவர்களை முத்தி இன்பத்தில் சேர்க்கும் ஆற்றலுடையதன்று.

பரமசிவனுடைய திருவடியை நினைக்கச் செய்வதும், செல்வத்தைத்தருவதும், பரமசிவனைமகிழ்விப்பதும், சகலபாவங்களைப் போக்குவதும், சிவகதை கேட்டவர்களிடத்து இடர்கள் இடர்ப்படச்செய்வதும், பரமசிவனை மகிழ்வுடனும் பக்தியுடனும் நினைக்கச்செய்து அதனால் முத்திப்பேரின்பம் அடையச்செய்வதும் ஆகிய இவை எல்லாம் சிவகதை கேட்ட அளவாலே ஆன்மாக்களுக்கு உண்டாகும். இவ்வளவு மகிமைகளைத் தர கங்கையால் இயலாது. ஆதலால் சிவகதை கங்கையினும் சிறப்புடையது.

சிவரகசியகண்டம் — (சூதமுனிவர் விளக்கம்.)

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலயவழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜென்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவாரப்பாடல் பெற்ற சிவதலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. அன்பர் பலரையும் இறைவழிபாட்டில் ஈடுபடுத்திவரும் ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு திருப்பாண்டிக்கொடுமுடி, திருக்கருவூர் ஆகிய தலங்களில் 14—3—84 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. கொங்குநாட்டுத் தலங்கள் ஏழனுள் 6, 7 ஆவது தலங்களாக இவை எண்ணப்படும். இத்தலங்களில் சுவாமி, அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்யப் பெற்றுத் திருப்பதிகப்பாராயணம் நிகழ்வுற்றது. "திருப்பாண்டிக் கொடுமுடி, திருக்கருவூர்த் திருப்பதிகங்கள்" என்ற நூல் வெளியிடப் பெற்றது. தருமையாதீனப்புலவர் வித்துவான் வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., தலத்திருப்பதிகங்களை விளக்கி உரையாற்றினர், அன்பர் பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல் ஞாயிறன்று காலை சரியாகப் பத்துமணிக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தை அன்பர்கள் வணங்கி, வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் ஆதீனத்திருமடத்தில் நிகழ்ந்து வருகிறது. இம்மாதம் 1—4—84 அன்று 34 ஆவது வழிபாட்டுக் கூட்டம் நடைபெற்றது. அன்பர்கள் திருநீறு பெற்றணிந்தனர்; கூட்டுப் பிரார்த்தனையும் ஸ்ரீ ருத்ர பாராயணமும் நிகழ்வுற்றன.

இம்மாதம் திருத்தொண்டர் புராணச் சிந்தனையாக முருக நாயனர், உருத்திரப்பசுபதிநாயனர் புராணங்கள் உபதேசிக்கப் பெற்றன. முருகநாயனர் அவதாரத்தலமாகிய திருப்புகலூரின் சிறப்புக்களை எடுத்துக்கூறி விளக்கினர்கள். நான்கு வகைப் பூக்களை ஆறுவகை மாலையாகத் தொடுத்து இறைவனுக்கு அணிவித்த தொண்டினைப் "பொழுது அறுகாலதது என்றும், பூசனை விடாது செய்து" என்னும் தொடர்கொண்டு விளக்கினர்கள்,

இதனை நான்கு வேதம், ஆறு அங்கம் என ஒப்பிட்டருளியமை இனிய சிந்தனையாக அமைந்தது. உருத்திரபசுபதி நாயனார் புராணத்தை உபதேசிக்கும்போது, வேதங்களின் நடுவில் ஸ்ரீ ருத்ரமும் ஸ்ரீ ருத்ரத்தின் நடுவணதாகப் பஞ்சாட்சரமும் அமைந்திருப்பதனைத் தேவாரங்களின் நடுவணதாகிய நாவுக்கரசர் தேவாரமாகிய 5 ஆம் திருமுறையில் திருப்பாலைத்துறைப் பதிகத்தின் இடையில் பஞ்சாட்சரம் அமைந்து விளங்குதலை விளக்கியருளினார்கள். பஞ்சாட்சரத்தின் சிறப்பு, ருத்ரர் பற்றிய கருத்துக்கள் கேட்கவும் சிந்திக்கவும் இனிமையாய் இருந்தன.

மயிலாடுதுறைப் பெருமக்களும் அன்பர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 35 ஆவது அருளுபதேசம் 6—5—84 அன்று நிகழ்வுறும். அன்பர்கள் கலந்துகொண்டு பயன பெறுவார்களாக.

## வசந்த நவராத்திரிவிழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வனதுர்க்கா தேவிக்கு வசந்த நவராத்திரி விழா 2—4—84 திங்கட்கிழமையன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் உலக நலன் கருதி ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகளும், நவசக்தி அர்ச்சனை மூலம் லட்சார்ச்சனையும், சப்தசதிமகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 10—4—84 செவ்வாய்க் கிழமையன்று சப்தசதிபூஜா ஹோமமும் இரவு லட்சார்ச்சனைப்பூர்த்தியும் நடைபெற்றன. தேவியின் சந்நிதியில் சப்தசதி, அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடைபெற்றன. நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். பக்தர் பலர் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

## பங்குனித்திங்கள் பெருவிழா

**வேளூரில் :**

தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்திய நாத சுவாமி தேவஸ்தானத்தில் 8—3—84 வியாழக்கிழமை தொடங்கிப் பத்துநாட்கள் பங்குனி உத்திரப்பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம் சகோபுரக்காட்சி, திருத்தேர்விழா, தீர்த்தவிழா ஆகியவை சிறப்புத் திருநாட்களாகக் கொண்டாடப் பெற்றன. தருமையாதீனக் கல்வி

நிலையங்களின் ஆசிரியர்கள் சமயகுரவர் நால்வர் பற்றி உரை நிகழ்த்தினர். திருமுறை விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. அன்பர் பலர் விழா நாட்களில் சுவாமிதரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன்பெற்றனர்.

### திருபுவனத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஸ்ரீ திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் 8—3—84 முதல் பத்து நாட்கள் பங்குனி உத்திரப்பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. கொடியேற்றம், தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, திருக்கல்யாணவிழா, திருத்தேர்விழா ஆகிய சிறப்புத் திருநாட்களில் பக்தர்கள் சுவாமிதரிசனம் செய்து இன்புற்றனர் 10—3—84 அன்று வித்துவான் திரு. இரா. செலவக்கணபதி எம். ஏ. பி. எட்., அப்பூதியடிகள் பற்றியும், 11—3—84 அன்று வித்துவான் திரு. சு. மு. சுந்தரராசன், எம். ஏ, பி. எட், மெய்ப்பொருள் நாயனர் பற்றியும், 12—3—84 அன்று வித்துவான் திரு. தா. ம. வெள்ளைவாரணம் திருமுறைகள் பற்றியும், 13—3—84 அன்று வித்துவான் திரு. மு. வைத்தியநாதன் ஏயர்கோன் கலிக்காமர் பற்றியும் உரையாற்றினர்.

திருமுறை விழா 12—3—84 அன்று நிகழ்வுற்றது. அன்று திருமுறைகள் அலங்கரிக்கப்பட்டு, யானைமேல் வைக்கப்பெற்றுத் திருவீதியுலா நடைபெற்றது.

25—3—84 ஸ்ரீ சரபர் உற்சவ தினத்தன்று ஸ்ரீ சரபமூர்த்திக்கு ஏகதின லட்சார்ச்சனையும் இரவு வெள்ளிரதக் காட்சியும் நிகழ்வுற்றன. அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினர்கள்.

### பேரளத்தில் :

தருமையாதீனத்திற்குச் சொந்தமான பேரளம் ஸ்ரீ சுயம்புநாத சுவாமி தேவஸ்தானத்தில் உத்திரபாதத் தீர்த்தத் திருநாள் 17—3—84 சனிக்கிழமையன்று நடைபெற்றது. அன்று காலை பஞ்ச மூர்த்திகளுக்கும் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், அக்னி புஷ்கரணி தீர்த்தத்தில்தீர்த்தம் கொடுத்தருளலும், இரவு திருவீதியுலாவும் நிகழ்வுற்றன. மாலை 7 மணியளவில் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பார்வதி திருமணம் என்னும் பொருளில், உரையாற்றினர். அன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தும் சொற்பொழிவு கேட்டும் பயன்பெற்றனர்.